26882

உ

சிவமயம்.

வேதாரண்யம்
தல வரலாறு.



1971 [விலை ரூ 1—00.

உ

ஸ்ரீ வேதாரண்யேஸ்வர சுவாமி

ஆலய தல வரலாறு.

திருவாவடுதுறை ஆதீன

மகாவித்துவான்

ச. தண்டபாணி தேசிகர்.

வெளியிடுவோர் :

ஸ்ரீ வேதாரண்யேஸ்வரசுவாமி தேவஸ்தானம்,

வேதாரண்யம்.

1971. *விலை ரூ. 1-00.*

ராஜன் அச்சகம், கீழ்வேளூர்.

வேதாரண்யேஸ்வரஸ்வாமி தேவஸ்தானம்.

வேதாரண்யம்

தல வரலாறு.

முகவுரை.

அன்புமயமாய் விளங்கும் இறைவன் தமது அருட்சக்தியாகிய இறைவியுடன் கூடி இவ்வுலகில் அசைவற்றனவும், அசைவனவுமான உயிர்த் தொகுதிகள் அனைத்தையும் அவையவை செய்த நல்வினை தீவினைப் பயன்களுக்கமையத் தோற்றுவித்து, காத்து, இளைப்பாற்றி மறைத்துஅருளி வீற்றிருக்கும் தலங்கள் பலப்பல. அவற்றுள் ஆதியலி, சத்தியகிரி எனவும், பின் இருக்கு, யசுர், சாமம், அதர்வனம் என்றும் நான்குவேத புருஷர்களும் பன்னெடுங்காலம் பூசித்து வழிபாடுசெய்த காரணத்தால் வேதாரண்யம், வேதவனம், திருமறைக்காடு, என பல நாமங்களால் அழைக்கப்படும் இந்தப்பதி, மிகமிகப்பழமை வாய்ந்தது. சமயகுரவர் ஆகிய அப்பரும், சம்பந்தரும் தமது அற்புத பாடல்களால் மறைகள் பூட்டி வைத்த கதவம் திறக்கவும் அடைக்கவும் பாடும் பரிசுபெற்றது. சுந்தரரும் பாடிய சிறப்பினையுடையது.

இது அரி பிரம்ம இந்திராதி தேவர்களாலும், அகஸ்தியர், விஸ்வாமித்திரர், நாசிகேது, முதலான முனிவர்களாலும், கங்கை, யமுனை, சரஸ்வதி முதலான நதிகளாலும், பஞ்சபாண்டவர் தசரதராமர், முகுந்தன், சேர சோழ பாண்டியர்கள் முதலாம் ராஜராஜாக்களாலும் பரிந்து, போற்றி வழிபாடு செய்யப்பெற்ற பெருமையினை யுடையது. பின்னுளில் வடஇலங்கையின் திலகமாகிய இயாழ்ப்பானத்திலுள்ள வரணி ஆதீன ஸ்தாபகரும் துறவறம்பூண்ட

மகா ஞானியும் ஆகிய ஸ்ரீ தில்லிநாயக தம்புரான் சுவாமிகளால் பணிபல புரிந்து போற்றி வழிபடப் பெற்ற சிறப்பு வாய்ந்தது. மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் மூவகை சிறப்பும் அமையப்பெற்றது.

இப்புராதன சிறப்பு மிக்க தலத்தைக் காண எண்ணற்ற பக்தர்கள் நாடோறும் நாட்டின் பல பாகங்களிலிருந்தும் வருகிறார்கள். அவர்கள் தலத்தின் வரலாற்றினையும் சிறப்பையும் அறிய விரும்புவது இயற்கையே. அத்தகைய நல்லோர் பொருட்டு இந்த வரலாறு தேவஸ்தான பதிப்பாக வெளியிடப்படுகிறது.

இவ்வரலாறு, திருவாவடுதுறை ஆதீன மகா வித்துவான் திரு. ச. தண்டபாணி தேசிகர் அவர்களால், விரிவாகவும், தெளிவாகவும், அழகாகவும் எழுதப்பட்டுள்ளது. அவர்களுக்கு எங்களது உளமார்ந்த நன்றி உரித்தாகுக.

இப்பதிப்பினை செம்மையான முறையில் இவ்வளவு குறுகிய காலத்தில் அச்சியற்றி அழகிய நூலாக ஆக்கித்தந்த கீழ்வேளூர் ராஜன் அச்சகத்தின் உரிமையாளர் திரு. தி. குஞ்சிதபாதம் அவர்களுக்கு எங்கள் பாராட்டுதலும் நன்றியும் உரித்தாகுக.

இத்தலத்திற்கு வரும் மெய்யடியார்கள் இப்புத்தகத்தை வாங்கிப்படித்து, இத் தலத்தினுடையவும், இவ் வெம்பெருமானுடையவும் தனிச் சிறப்பை உணர்ந்து வழிப்பட்டு உய்யவேண்டுகிறோம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ

ச. கதிர்காமபண்டார சந்நிதி,
பரம்பரை தர்ம கர்த்தா.

சோ. அரங்கசாமி,
நிர்வாக அதிகாரி.

28-11-1971.

௧

சிவமயம்.

வேதாரண்யம்

தல வரலாறு.

மனிதனுடைய வாழ்வனைத்தும் மனத்தைப் பொறுத்தே யுள்ளது. மனமோ பற்றியதைப்பற்றி நில்லாமல் ஒன்றைவிட்டு ஒன்றைத்தாவிக்கொண்டே செல்கிறது. மனம் தாவாமல், ஒன்றிலேயே சில கணநேரமாவது நிலைத்து நிற்கப் பழகவேண்டும். அதற்குரிய பயிற்சிச் சாலைகள் காடும் மலையும் கடலும் இயற்கைச்சூழல்களே. வாழ்வில் - போட்டியும் பொறாமையும், போரும் பூசலுமாகிய மேடு பள்ளங்களிற்சிக்கித் தவித்த மனம் முற்கூறிய இயற்கைச்சூழல் ஒன்றில் சிறிதுநேரம் இளைப்பாறுகிறது ஆதலால் உயிர்களுக்கு இன்பம் உதவுதலையே லட்சியமாகக்கொண்ட இறைவன் காடு, மலை, கடற்கரை முதலான இயற்கையழகு மலிந்த இடங்களில் தாமும் கோயில்கொண் டெழுந்தருளி யிருக்கிறார். இயற்கையோடு இயற்கையாகக்கலந்து அழகை வெளிப்படுத்தி ஆனந்தத்தை அளித்து வருகிறார். அத்தகைய இன்ப இடங்களே தலமாகும்.

இயற்கை செயற்கையாகிக்கைவண்ணம் பெற்று, சித்திரங்களாகவும், சிற்பங்களாகவும் பின்னிப் பிணைந்து மாடகூடங்களாகவும், கோபுரங்களாகவும்

விளங்குகின்றபோது இன்னும் இறையுணர்ச்சிப் பெருகுகின்றது. அத்தகைய வண்ண வண்ணச்சிற்பங்கள் சிந்தனைக்கு விருந்தாகிச் சிவம்பெருக்கும் இடங்களே தலங்கள்.

அவை ஆயிரத்தெட்டு. நூற்றெட்டு என எண்ணலும் சிறந்து விளங்குவன. அவற்றுள் வளம்பெருக்கும் ஆறுகள், மலைகள், காடுகளின் பக்கத்தில் செந்தமிழ் மணம் சிறந்து தெய்வப்பாடல்கள் ஒலிசெய்ய விளங்குவன சிறந்த தலங்களாம். அவை இருநூற்றெழுபத்தெட்டு. அவற்றுள் காவிரிக்குத்தென் கரையில் உள்ளவை நூற்றிருபத்தேழு. அவற்றுள் நூற்றிருபத்தைந்தாவது தலம் இது.

தலங்களை நமக்கு அறிமுகப்படுத்துகின்ற திருவருட்செல்வர்க ளனைவரும் வெள்ளொளி பொங்கி வழியும் புதுமணல் பரந்த கானலிலே கடல்அலைகள் முத்துக்களை கொணர்ந்து குவிக்கின்றன. அவைகள் காரிருளைப் போக்குகின்றன. என்ற கருத்தமைந்த

> "பொங்கு வெண்மணல் கானல் பொருகடல் திரைதவழ்முத்தம்
> கங்குல் ஆர் இருள் போழும் கலிமறைக்காடு"

என மறைக்காட்டை யறிமுகப்படுத்தி, அதில் இருப்பவர் இறைவன் எனத் தெரிவிப்பதைச் சிந்தியுங்கள். கடலிலே— அலையிலே, முத்துக்களிலே பதிந்த நம் மனம் இரவுவரை காத்திருந்து காரிருளை அம்முத்துக்கள் போக்குவதைக் கண்டு களித்து,- அதுபோலக் கடவுள் முத்து அருளலையால் மனக்கரையிலே வந்து ஒதுங்கி அறியாமை யாகிற காரிருளைப் போக்கி கருணையாகிற வெள்ளொளி வீசுகின்றது என்ற நயத்தை உணர்த்தி நம்மனத்தை இறைவனிடத்திலே ஒன்றச் செய்கின்ற அற்புதத்தை அறிவிப்பதைப் பாருங்கள். இவ்வண்ணமே ஏனைய பாடல்கள் அனைத்தும்.

இத்தகைய பாடல் பெற்ற தலங்களே மிகமிகச் சிறந்தன. அவற்றுள்ளும் கடல், மணற்குன்று, காடு, திருக்கோயில் கோபுரம் முதலான இயற்கையும், செயற்கையுமான சிறப்புக்களால் தனிப் பெருமை படைத்தது வேதாரணியம்.

இருப்பிடம்: இத்தலம் நெற்களஞ்சியமாகிய தஞ்சாவூர் மாவட்டத்திலே திருத்தருப்பூண்டி தாலூகாவில் உள்ளது. மாயூரம்—காரைக்குடி புகை வண்டி வழியில் திருத்தருப்பூண்டி — கோடியக்கரை கிளைப்பாதையில் உள்ளது. கீழ்க்கடற்கரையோரம். ஆலயம் வேதாரணியம் புகைவண்டி நிலையத்திலிருந்து மேற்கே ½ கல் தொலைவில் உள்ளது.

மாயூரம்–கோடியக்கரை, கும்பகோணம்–வேதாரணியம், திருத்தருப்பூண்டி-வேதாரணியம், மன்னார் குடி–வேதாரணியம். நாகப்பட்டினம் – வேதாரணியம் என பல பேருந்துப் (பஸ்) பாதைகளாலும் இவ்வூரடையலாம். திருத்தருப்பூண்டியிலிருந்து 22 கல் தொலைவில்உள்ளது. நல்லகற்சாலைகளுடன் கூடியது.

நிலம் நல்ல மணற்பாங்கானது. எவ்வளவு மழை பெய்தாலும் காலில்சேறு ஒட்டாதபடி உடனே உய்ந்து போகும் நிலப்பரப்பு. நாலாபக்கமும் தாழை வேலியும் நீர்முள்ளிக் காடும் சிறுசிறு நீர்த் தேக்கங்களும் உப்பங்கழிகளும் நிறைந்தது. பொதுவாக மன அமைதியை நாடி வருவார்க்கு மிகச்சிறந்த சூழல்.

தங்கும் வசதி: இத்தலத்தில் புகைவண்டி நிலையத்தின் ஓரமாக பயணிகள் தங்கும் விடுதி ஒன்று உளது. ஊருக்குள்ளே பல மடங்கள் உள்ளன. அவற்றில் ஓரளவு அறிமுகம் இருந்தால் யாரும் தங்கலாம். இவையன்றி நகரத்தார் விடுதிகளும், வேத பாடசாலை, சத்திரங்களும் உள்ளன. ஸ்ரீ தாயுமான சுவாமிகள் இல்லம், ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள்

மடம், தண்ணீர்ப்பந்தல், ஏகாதசி மடம், முத்துக் கருப்பன் செட்டியார் சத்திரம், பசுமடம் முதலியனவும் உள்ளன. இவற்றிலும் பயணிகள் சமயசீலம் உடையவர்களாயின் அனுமதி பெற்றுத் தங்கலாம்.

சாதுக்கள் மடம் வேதாந்த துறவிகள் சாத்திர விசாரம் செய்வதற்குறிய இடம். அதிலும் தங்கலாம். இவையன்றித்தனித்த செல்வர்களுடைய விடுதிகளும் தெற்குவீதி மேல்கோடியில் உள்ளன.

இவ்வண்ணம் வழிபாட்டிற்கு வரும் பயணிகள் தங்குவதற்குப் பலவசதியான இடங்கள் உள்ள தலம் இது. (கிளப்) சோற்றுக் கடைகளுக்குப் பஞ்சமே இல்லை. எப்போதும் உணவு கிடைக்கும்.

நீர் நிலைகள் :- ஊருக்கு மேற்கே சுமார் ஒருகல் தொலைவில் இன்று ஏரியென வழங்கப்படும் பெரிய குளம் இருக்கிறது. நல்லத் தண்ணீரையுடையது. குளிக்கப்பயன் படுவது. இவையன்றி மேலச் சந்நிதியில் ½ கல் தொலைவிலும் மேலவீதி கோடியில் 1-கல் தொலைவிலும் ஊரைச்சுற்றியும் பல சிறு சிறு குளங்களும் குட்டைகளும் நீர்த் தேக்கங்களும் உள்ளன. பொதுவாக நீர் வசதிக்கு குறைவில்லாத தலம் எனலாம். வீடுகள்தோறும் நல்ல தண்ணீர்க்கிணறுகளும் ஊற்றுக்களும் உள்ளன. ஆனாலும் மக்கள் புண்யம்—சுகாதாரம் இரண்டையும் கருதி கோயிலுக்குள் இருக்கும் மணிகன்னிகைத் தீர்த்தத்தையும் விசுவாமித்திரக் கிணற்று நீரையுமே குடிநீராகப் பயன் படுத்துவார்கள்.

ஆட்சி :- இத்தலம் (நகர) பஞ்சாயத்துக்கழக ஆட்சிக்குட்பட்டது. இதில் ஊர்காவல் அலுவலகம், தபால் தந்தி யலுவல்கங்கள், அரசாங்க மருத்துவ மனை, மகப்பேறு மருத்துவ மனை, பத்திரப் பதிவு நிலையம், தாய் சேய் நலவிடுதிகள், சமுதாய நல

வளர்ச்சி நிலையம் துணை வட்ட ஆட்சியாளர் (டிபுடி தாசில்தார்) அலுவலகம் முதலியன உள்ளன. கோயில் நிர்வாகத்திற்குரிய தேவஸ்தான அலுவலகமும் உள்ளது.

கல்வி நிலையங்கள் :—அரசினர் உயர்நிலைப்பள்ளி ஒன்றும் பல தொடக்கப்பள்ளிகளும், சர்தார் வேதரத்னம் அவர்கள் கஸ்தூரிபாகாந்திகன்யாகுருகுலமும் அரசியலார் ஆதாரப் பயிற்சிப்பள்ளியும், பெண்கள் பயிற்சிப் பள்ளியும், தாயுமானவர் பாடசாலையும் உள்ளது.

சுகாதாரம்:— மிகமுக்கியமான இடங்களில் குடிதண்ணீர்க்குழாய் வசதிகளை ஊராட்சி மன்றம் அமைத்திருக்கிறது. ராஜாஜி பூங்கா, காந்தி பூஞ்சோலை முதலிய பொழுதுபோக்கு நிலையங்களும் உள்ளன. இவை வெறும் பொழுது போக்கிடங்கள் மட்டுமன்று. நமக்கு எப்படி சுதந்திரம் கிடைத்தது என்பதை நினைவுறுத்திக்கொண்டே இருக்கும் உப்பு சத்தியாக்கிரகம் நடந்த இடமுமாகும்.

தொழில் வளம்:— மக்கள் தொகை சுமார் பதினையாயிரம். இங்கு நடைபெறும் தொழில் பெரும்பாலும் விவசாயமும் உப்பளத்தொழிலுமே. மீன்வளமும் மிகுதி. பனை ஓலை முதலியவற்றால் நடைபெறும் குடிசைத்தொழில் மிகுதி. புகையிலை விவசாயமும் மிகுதியாக நடைபெறுகிறது. ஸ்வஸ்திக் கம்பெனி முதலியவைகளால் புகையிலை பதப்படுத்தப் பெற்று நாடுமுழுவதும் விற்பனைக்குச் செல்கிறது. உப்பு, மீன்வளம், பனைத்தொழில், தாழம்பெட்டி, புகையிலை இவைகளே இவ்வூர்ப் பொருளாதாரத்தை உயர்த்துவன. இத்தலத்தின் பக்கத்திலுள்ள சிறு கிராமங்களிலிருந்து ஒருவகையான உயர்ந்த முல்லை மல்லிகைப்பூக்கள் பல இடங்களுக்கு அனுப்பப்படுகின்றன. இதனாலும் ஊரின் செல்வம் உயர்கிறது.

புகையிலைத் தோட்டங்களில் கரையோரப் பயிர்களாக கத்தரி, மிளகாய், முருங்கை, கிரைத்தண்டு முதலிய கறிவகைகளும் ஏற்றுமதியாகின்றன.

கோடியக்கரைகாடு மிக நீளமானதும் பெரியதும் அரசியல் பாதுகாப்புக் குட்பட்டது. அதிலிருந்து ஒருவகை பாகற்காயும் விறகு முதலியவையும் விற்பனைக்குப் போகின்றன.

அல்லாமலும் வியாபாரப் போக்கு வரத்துக்கு சாதகமாக கடலைஒட்டி ஒரு கால்வாய் நாகப்பட்டினம் வரையில் கரையோரமாகவே செல்லுகிறது இதன் வழியாக உப்பு, மட்டை, விறகு முதலியன ஏற்றித் தோணிகள் போக்குவரத்து செய்கின்றன.

தலப் பெயர்கள்:— இத்தலம் கடற் கரையாகிய நெய்தல் நிலத்திலுள்ளது. இது திருமுறைகளில், மறைவனம், மறைக்காடு, வேதவனம் என்றெலாம் வழங்கப்படுகிறது, புராணங்களில் வேதவனம் சத்தியகிரி என்பது. ஆதிசேது என வழங்கப்பெறுகிறது. வழக்கில் வேதாரணியம் என வழங்குகிறது. மறைவனம் என்பது மருவி மறைசை எனவும் இலக்கியங்களில் வழங்குவதுண்டு.

கல் வெட்டுக்களில் இத்தலம் உம்பள நாட்டுக் குன்னூர் நாட்டுத் திருமறைக்காடு என்று குறிக்கப் பெற்றுள்ளது. இப்பெயர்கள் யாவும் வேதங்கள் பூசித்த வரலாற்றைக் கொண்டு அமைந்த பெயர்களாம். சத்தியகிரி என்பது என்றும் அழியாதமலை என்று பொருள்படும். இது கோடியக்கரையிலுள்ள மணல் மலைக்குப்பெயர். முன்னொரு காலத்தில் இங்கு ஒருமலை இருந்ததாகவும் அதிலிருந்து சத்திய நதி என்ற ஓராறு உற்பத்தியாகி கடலொடுகலந்ததாகவும் பின்னர் வேதநதி என்ற சந்நிதிக்கடலோடு ஒன்றி விட்டது என்றும் புராண வரலாறு புகல்கின்றது.



ஆதியிராமன் இலங்கை செல்ல முதன்முதற் கட்டிய அணையையுடையதாதலின் ஆதிசேது எனப் பெயர் பெற்றது, சமய உலகில் தென்கைலாயம், தட்சிண கயிலாயம் எனவும் இத்தலம் வழங்கப் பெறுகின்றது.

திருக்கோயில் அமைப்பு :- இது சப்த விடங்கத் தலங்களில் ஒன்று. ஆதலால் திருவாரூர்ப் பூங் கோயிலைப்போலவே உள்ளது. கிழக்குப் பார்த்த சந்நதி. கோயிலுக்குள்ளே இரண்டு சுற்றுலைகளும் (பிரகாரங்களும்) கோயில் திருமதிலையடுத்து மடவளாகமும், அதனையடுத்து நாற்புறமும் தேரோடும் விதிகளும் உள்ளன.

கிழக்குள்ளது ராஜகோபுரம். அது ஐந்து நிலைகளை யுடையது. மேலே ஒன்பது கலசங்களை யுடையது. கோபுரத்தையடுத்து தென்கிழக்கு மூலையில் உட்பக்கமாக மணிகன்னிகை தீர்த்தமும், நவகன்னிகை மண்டபம், விசுவாமித்திரக் கிணறு, மடைப்பள்ளி நந்தவனம் முதலியவைகள் உள்ளன.

மேற்புறத்தில் சேர, சோழ, பாண்டியர்கள் தாபித்து வழிபட்ட சிவலிங்கக்கோயில்களும், மேலை கோபுரமும், அதனையடுத்து பிரம்மஹத்தி மேடையும், வீரஹத்தி விநாயகர், மேலக்குமாரர் சந்நதிகளும் உள்ளன. வடக்கம் பிரகாரத்தின் தலைப்பில் அம்மன் கோயில் தனியே உள்ளது. அம்மன் கோயிலுக்குள் பிரகாரத்தில் கன்னிமூலையில் விநாயகருக்கும், வாயு மூலையில் குமாரருக்கும் கோயில்கள் உள்ளன. வேதவனேச கோயிலுக்கு வட புறத்தில் காசி விஸ்வநாதர் சந்நதி, பதினாறுகால் மண்டபம், ஊஞ்சல் மண்டபம் முதலியவைகளும் யாகசாலைகளும் உள்ளன.

உட்பிரகாரத்தில் முறையே சுந்தரர், பிட்சாடனர், அர்த்தநாரீசர் முதலான எழுந்தருளுந் திருமேனி

ஸ்ரீ வேதாரண்யேஸ்வரஸ்வாமி ஆலயத்தின் வரைபடம்.



களும், அறுபத்துமூவர் சிலைகளும், அவர்களின் எழுந்தருளுந் திருமேனிகளும், கன்னி விநாயகர், வேதவனப்பிள்ளையார், முருகன், லட்சுமி, சனீசர், சரஸ்வதி, அன்னபூரணி, காடுகாளாகிய துர்க்கை, முதலிய சந்நிதிகளும் உள்ளன. துர்க்கைக்குச் சிறந்த தலம். இதனைத் திருமுறை ஆசிரியர்களே குறித்துள்ளனர். இவ்வூர் கோளிலித் தலங்களில் ஒன்று. ஆதலால் நவக்கிரகங்கள் வக்கிரமின்றி வரிசையாக உள்ளன.

நடுமண்டபத்தில் தியாகராஜர், வேதாரண்யேசர் முதலிய மூர்த்திகள் எழுந்தருளியுள்ளனர்.

மூலட்டானமுடையாருக்குப்பின்னே உமாமகேசர் மணவாளத் திருக்கோலத்துடன் காட்சி வழங்குகின்றார். ஆண்டுகள் தோறும் சித்திரை மாதம் பூர்வ பக்கத்துச்சப்தமி நாளில் மணவாளக் கோலப்பெருமானுக்குச் சந்தனக்காப்புச் சாத்தப்பெறுகின்றது.

பொதுவாகக் கோயிலின் சுற்றளவு கீழ்மேல் அடி 692. தென்வடல் அடி 372. ஏனைய குறிப்புக்களைக்கோயிலின் வரைபடத்தைக்கண்டு தெளியலாம்.

மூர்த்திகள்.

தலவிநாயகர்: இத் தலத்திலுள்ள தல விநாயக வீரகத்திப்பிள்ளையார். இவர் இராமரைத் தொடர்ந்து வந்த வீரகத்தி பாவத்தைப் போக்கியதால் இப்பெயர் பெற்றார். இதனை

"திருமறைக்காட்டினில் இராமர் பின்னே தொடர்ந்து வரும் வீரகத்தி தீர்த்தருள் செய்யும் விநாயகன்" என்று க்ஷேத்திரக்கோவைப் பிள்ளைத் தமிழ் கூறுகிறது. இவர் கோயில் மேலக் கோபுரத்திற்கு எதிரில் வெளிப்பிரகாரத்தில் இருக்கிறது.

வேதாரண்யேசுவரர்: இவரே இத்தலத்து மூல மூர்த்தி. சிவலிங்கத்திருமேனி. வேதநாயகர், வேத

வனேசர்; மறைகாட்டீசர் முதலிய பெயர்களால் திருமுறைகளும், புராணங்களும் வழங்குகின்றன. கல்வெட்டுக்கள் வேதவனமுடைய நாயகர், வேதவனமுடையார் என்ற பெயர்களால் அழைக்கின்றன. ஞானசம்பந்தப் பெருமான் "வேதங்கள் போற்றி மலரால் வழிபாடுசெய் மாமறைக்காடர்" என்பதால் இப்பெயர்க்காரணம் நன்கு விளங்கும்.

மறைக்காட்டுறையும் மணாளர் :- இவர் மூலஸ்தானத்தில் வேதவனேசருக்குப்பின்னே எழுந்தருளியிருக்கிறார். அகத்தியனார்க்கு அம்மையப்பராக மணவாளக் கோலத்துடன் அகத்தியருக்கு காட்சி வழங்கியதாக வரலாறு. இதனை அப்பர்சுவாமிகள் "மலையார்தம் மகளோடும் மாதேவன் சேரும் மறைகாடு" என்பதால் அறியலாம்.

அம்மை :- இத்தலத்துள்ள அம்மை திருநாமம் வீணாவாத விதூஷணி என்பது. இது வடமொழிப் பெயர். தமிழில் திருமுறைகள் யாழைப் பழித்த மொழியுமையாள் என வழங்குகின்றன. சுந்தரமூர்த்திசுவாமிகள் "யாழைப்பழித்தன்னமொழிமங்கையொடுபங்கன்" எனக்கூறுதல் காணத்தக்கது. இவ்வம்மை அன்பர்கள் வேண்டியன எல்லாம் அளிப்பதால் மிகச்சிறந்த நேர்த்தித் தெய்வமாக வழிபடப்படுகிறது.

தியாகராசர் : முசுகுந்தச் சக்கிரவர்த்திக்கு இந்திரன் அளித்த தியாக மூர்த்தங்களுள் ஒன்று. இவர் செய்யும் நடனம் அம்ச நடனம் எனப்படும். அம்ச நடனமாவது அன்னம்போல மெதுமெதுவாக அடி எடுத்துவைத்து அசைந்தாடும் நடனம்.

இத்தலத்தின் சிறந்த மூர்த்திகளுள் இது ஒன்று.

புவனி விடங்கர்: தியாகராசர் சந்நிதியிலேயே பெட்டகத்துள் எழுந்தருளியிருக்கும் மரகத சிவலிங்

கத்திருமேனி நாடோறும் இரண்டு காலங்களில் திரு மஞ்சனம் ஆட்டப்படுவது இம்மூர்த்திக்கே. இது பச்சை ரத்தினத்திஞலான திருமேனி.

துர்க்கை :– இது சிறந்த வழிபாட்டுத் தெய்வம். சுவாமி கோயிலின் முதற்பிரகாரத்து வட பக்கத்தில் தெற்கு நோக்கியிருக்கிறது. இது பலபேருக்குக்குல தெய்வமாகவும் கொண்டாடும் தெய்வமுமாக விளங்கு கிறது. பில்லி, சூனியம், தெய்வக்கோளாறுகள் கிரகக் கோளாறுகள் உள்ளவர்கள் இதற்குச்சிறந்தஅபிஷேக ஆராதனைகளைச் செய்து குறைகளைப் போக்கிக்கொள் கிருர்கள். சிறப்பாக மஞ்சள், குங்குமம், நூல்கயிறு இவற்றை வைத்து மந்திரித்துப் பயன் படுத்திஞல் எல்லா நன்மைகளும் விளையும் என்ற நம்பிக்கை நிலவி வருகிறது.

நடராஜர் : இம்மூர்த்தி பதினெட்டு நடனங்களுள் ஒன்று என்று வேதாரணியத் தலபுராணம் கூறுகிறது. சிற்பத்திறம் செறிந்த அழகான அமைப்பு.

காட்சி கொடுத்தவர்: இது எழுந்தருளுந்திருமேனி இது மாகேஸ்வர வடிவம் இருபத்தைந்துள் ரிஷபாந் திக மூர்த்தி எனப்படுவது. புன்னகையுடன் வலது கையை இடபத்தின் சிரத்தில் ஊன்றி இடது கையை தொடையில் வைத்து நிற்கும் கோலத்தைக் கண்டால் எவர் மனமும் அழகில் ஈடுபடாமல் இராது.

சந்திரசேகர மூர்த்தி :– இதுவும் எழுந்தருளும் திரு மேனி, விழாக்காலங்களில் தியாகேசர் புறப்படாத நாட்களில் இவருக்குத்தான் பட்டம்கட்டுவது வழக்கம் இது சந்திரசேகரப்பட்டம் என வழங்கும்,

தீர்த்தங்கள்: இத்தலத்தில் தொண்ணூற்ருறு தீர்த் தங்கள் உள்ளன. சிறந்தன மணிகர்ணிகை, விசுவா மித்திர தீர்த்தம், வேதாமிர்த தீர்த்தம், வேத நதி

கோடி தீர்த்தம் என்பவைகளே. இந்த தொண்ணூற்றுறு தீர்த்தங்களையும் ஆறுயாத்திரைகளாகப்பகுத்து நீராடுவது பண்டையமரபு. ஆறு யாத்திரைகளாவன 1. அந்தாக்கிரக யாத்திரை, 2. விஷ்ணு யாத்திரை, 3. சேது யாத்திரை, 4. தெக்ஷிண மானச யாத்திரை, 5. பிரம யாத்திரை, 6, உத்தரமானச யாத்திரை என்பன. சிறந்த தீர்த்தங்களில் நீராடும் முறைமையும் நாளும் பயனும் பின்னர் புராண வரலாற்றுள் கூறப் பட்டிருக்கின்றன.

தலப்பெருமை: ஒரு தலத்திற்குப் பெருமைகளாவது மூர்த்தி, தலம், தீர்த்தம் என்றமூன்றுலுமே, இங்கு இந்த மூன்றும் சிறந்திருப்பது தனிச்சிறப்பு. இத் தலம் வேதங்களால் பூசிக்கப்பட்டது. ராமர்க்கு வீரகத்தியை நீக்கியது. அகத்தியருக்குமணவாளக்கோலங் காட்டியது. விளக்கைத் தூண்டிய எலியை வேந்தனுக்கியது. முசுகுந்த சக்கரவர்த்தியால் வழிபடப் பட்டது. வேதாரண்யம் விளக்கழகெனப் பழமொழியாலேயே பாராட்டப்படுவது. நசிகேதஸ்வேதகேது, கௌதமர், மனுமாந்தாதா, தசரதன் விசுவாமித்திரன், வசிஷ்டன் முதலியோரால் வழிபடப்பட்டது. கடல் ஆனாலும் எப்பொழுதும் ஆடப்பெறும் கடவுள் தன்மை படைத்தது. சக்திபீடம் அறுபத்துநான்கில் ஒன்றாகிய சுந்தர பீடத்தையுடையது. திருமுறைச் செல்வர் களாலும், பிற புலவர்களாலும் போற்றிப் புகழப் பட்டது. வரலாற்றுத் தொடர்புடையது. திருஞான சம்பந்தசுவாமிகளும், திருநாவுக்கரசு சுவாமிகளும் இங்குவந்தடைந்த போது, வேதங்களால் அடைக்கப் பட்ட கதவுகளைத் திறக்கவும் அடைக்கவுமாகப் பாடப் பட்ட பெருமையை உடையது. ஆதலால் இத்தலம் தென்னாட்டுத்தலம் அனைத்திலும் சிறந்தது.

சிற்பம், சித்திரம், கலைப்பொருள்கள்:

தென்னாட்டுக்கோயில்கள் அத்தனையுமே சிற்பத் திறம் செறிந்தன. அதிலும் சோழ நாட்டிலே, கன்

மலையில்லாத காவிரிக்கரையிலே இருமருங்கும் எழுந்துள்ள கோயில்கள் சிறந்த கற்சிற்பங்களைப்பெற்று விளங்குவது சோழமன்னர்களுடைய அளவிலடங்காத அன்பின் எல்லையைக்காட்டுவன. அங்ஙனமே இந்த வேதாரணியக் கோயிலும் சிற்பத்திறம் செறிந்த கொடுங்கைகள், போதிகைகள், யாளிகள், யாளிகளின் வாயிலிருந்து தொங்கும் கற்சங்கிலிகள், யாளிகளின் வாயிற்கிடந்துருளும் கருங்கல் உருண்டைகள் தூண்களில் அமைந்துள்ள கொடிக்கருக்கு முதலிய வேலைப்பாடுகள் அனைத்துமே வைத்தகண் வாங்காமல்பார்த்துக்கொண்டே இருக்கச்செய்யும் எழில் வாய்ந்தவை.

சந்நிதி முன் மண்டபத்து மேற்றலத்து பாவு கல்லில் பன்னிரெண்டு ராசிகளும் செதுக்கப்பட்டுள்ளன. இருபத்தேழு நட்சத்திரங்களும் அவ்வவ்வற்றிற்குரிய தியான சுலோகப்படி அமைக்கப் பெற்றுள்ளன, திருப்பதிகங்கள் வெள்ளைக்கல்லில் வெட்டுவிக்கப் பெற்றுள்ளன.

உள் பிரகாரத்துச் சுவர்களில் தல வரலாறுகளை விளக்கும் சித்திரங்களும் வேறுபல சிவ பரத்துவ சித்திரங்களும், கலைச் சித்திரங்களும் எழுதப்பெற்றுள்ளன.

சிற்பத்திறம் செறிந்த சிலைத் திருமேனிகளாகத் துர்க்கை, சரசுவதி, சண்முகர் முதலிய தெய்வங்கள் திகழ்கின்றன.

சுதைச்சிற்பமாகத் திருமகள் எழுந்தருளியிருக்கின்றார். இவையன்றிக் கோபுர விமானங்களில் பல சுதைச்சிற்பங்கள் விளங்குகின்றன.

மூலட்டானருக்குப்பின்னே விளங்கும்மணவாளப் பெருமான் திருவுருவம் மிக அழகானது.

இத்தலத்துள்ள உற்சவ உருவங்கள் மிக அழகானவையும், பழமையானவையுமாம்.



பாவை விளக்குகள் மூன்றுள்ளன. நவக்கிரகங்கள் வரிசையாக உள்ளன. இவ்வண்ணம் இக்கோயில் சிறந்த கலைக்கூடமாக காட்சியளிப்பது.

தல விருட்சம் : சுவாமி கோவிலுக்கு முன்புள்ள வன்னிமரம் தல விருட்சமாகும். பெரும்பாலும் தல விருட்சங்கள் அமைவது புராண வரலாற்றுடனுவது, ஆதியில் அந்த மரம் அடர்ந்த காடாகவாவது இருப்பது மரபு. அவ்விருவகையில் இவ்விருட்சம் அகத்தியர் திருமணக்கோலக்காட்சியை விரும்பிதவம்செய்து சித்திபெற்ற இடமாகலின் புராண வரலாற்றுத் தொடர்புடையது. அம்மன் சந்நிதிக்கு எதிரில்உள்ள புன்னை மரத்தையும் தலவிருட்சம் என்கின்ருர்கள், நெய்தல் நிலம் புன்னையங்காணம் ஆதலாலும் திருநாவுக்கரசு நாயனுர் திருக்குறுந் தொகையுள் சுரக்கும் புன்னைகள்சூழ் மறைக்காடரோ என்று வருதலாலும் புன்னையும் தலவிருட்சமாகக் கருதப்பட்டிருக்கலாம்.

மண்டபங்கள் : இரண்டு பிரகாரங்களிலும், ராஜ நாராயண மண்டபம், பதினறுகால் மண்டபம், வன்னியடி மண்டபம், செட்டியார் மண்டபம், புராண மண்டபம், மகாமண்டபம், அர்த்தமண்டபம் முதலிய மண்டபங்கள் கருங்கல்லால் ஆனவை.

மணிகர்ணிகையைச்சுற்றி சிவபூசை செய்யவும், செபம் முதலாயின செய்யவும் ஏற்ற ஓட்டு மண்டபங்கள் உள்ளன. வசந்த மண்டபமும், சேதுபதி மண்டபமும் செங்கற்களால் ஆனவை. மூன்று பத்திகளாக ஓட்டப்பட்டவை.

நடராசப்பெருமான் எழுந்தருளியுள்ள சபை உட்பிரகாரத்தில் உள்ளது, இதற்குத் தேவர் தொழு மன்றம் எனவும், தேவபக்த சபை எனவும் பெயர் உண்டு.

சுற்றுத் தலங்கள்.

அகத்தியான்பள்ளி:—இது திருஞானசம்பந்த சுவாமிகளின் பதிகம் பெற்றது. வேதாரணியம் பெரிய கோயிலிலிருந்து கோடியக்கரை போகும் சாலையில் சுமார் ஒரு மைல் தூரத்தில் உள்ளது.

சிவபெருமானுடைமணவாளத்திருக்கோலத்தைக் காண அகத்தியர் தவஞ்செய்த இடம்.

சுவாமி பெயர் அகஸ்தீஸ்வரர். அம்மை—பாகம் பிரியாள். அழகான அகத்தியர் திருவுருவம் ஒன்று உள்ளது. பரிவாரங்களுடன் கூடிய சிறிய அழகான கோயில்.

கோயிலுக்கு எதிரில் அக்கினித் தீர்த்தம் இருக்கிறது. இங்கு ஆனி மாதம் பெருவிழா நடைபெறும். நாள்தோறும் காலை நண்பகல் இரவு ஆகிய மூன்று கால பூசைகளேயுண்டு, தேவகோட்டை பழ, சோம. சோமசுந்தர செட்டியார் அவர்களால் திருப்பணிசெய்யப்பெற்று சென்ற ஸ்ரீமுக வருஷம் ஆனி மாதத்தில் கும்பாபிஷேகம் செய்விக்கப்பட்டது. அடுத்துப் பவ ஆண்டு ஆனியில் அம்மை கோயில் கும்பாபிஷேகம் செய்விக்கப் பெற்றது, 1955-ல் பழ. கைலாசநாதன் செட்டியாரால் மின் விளக்கு அமைக்கப் பெற்றது.

1930ம் ஆண்டு உப்பு சத்தியாக்கிரகம் நடந்த வரலாற்றுத் தொடர்புடைய இடம், திருக்கோயிலுக்குச்சொந்தமாக 100 ஏக்கர் உப்பளம் இருக்கிறது.

ஜனத்தொகை 1931ல் 2688, அரசியலாரால் 1904ல் படி எடுக்கப்பட்ட கல்வெட்டுக்கள் நான்கு உள்ளன.

1) 504/1904. அகத்தீஸ்வரர் கோயில் கருப் பக்கிருகத் தென்புறச் சுவரில்: மாறவர்மனை திரி புவனச் சக்கரவர்த்தி வீரபாண்டிய தேவன் ஆட்சி யாண்டு 15ல் ஒருவன் கோயிலுக்கு நிலம் வழங்கியச் செய்தி. சிதிலம். வீரபாண்டியன் கி.பி. 1253 முதல் 1278 வரை அரசாண்டவன்.

2) 505/1904 அதே சந்நிதி தென்பக்கத்து அடித் தளத்தில்: மூன்றும் ராஜராஜ தேவர் ஆட்சி ஆண்டு 2ல் சந்நிதியில் ஒரு விளக்கு எரிக்க 1500 காசு வழங் கியது. இது 29–1–1218 திங்கட்கிழமையாக இருக்க லாம் என்று எபிகிராபிகா இண்டிகா Vol. VIII P-267 கூறுகிறது.

3) 506/1904 அதே வடப்பக்கம் சுவரில்: மாற வர்மனை குலசேகர பாண்டியதேவன் (1268–1308) ஆட்சியாண்டு முப்பத்தொன்றில் அரசனுக்குநேர்ந்த சில இன்னல்கள் நீங்குவதற்காகத் திருவிழா நடத்த நிலமளித்த செய்தி.

4) 507/1904, வடப்பக்கம் சுவர் அடித்தளத் தில்:– முற்குறித்த குலசேகர பாண்டியனுடைய ஆட்சியாண்டு ஐந்தில் பொன் அளித்த செய்தி. இவை களால் இக்கோயில் கி. பி. 1218 முதல் 1308 வரை அரசர்களின் அன்பிற்கு உரியதாக இருந்தமை வெளிப் படை.

இத் தலத்தைப்பற்றிய வரலாற்றுக் குறிப்புகள் சில தஞ்சாவூர் கெஜட்டியரில் குறிக்கப்பட்டுள்ளன.

கோடிக்குழகர் கோயில்: இத்தலம் வேதாரணியம் புகை வண்டி நிலையத்திலிருந்து தெற்கே ஏழுகல் தொலைவிலும், கோடியக்கரை புகைவண்டி நிலையத்தி லிருந்து வடக்கே ஒருகல் தொலைவிலும் காட்டுக்குள் இருக்கிறது. சுந்தரமூர்த்தி சுவாமிகள் காட்டுக்

குள்ளே இறைவன் தேவியாரோடு தனித்திருப்பதைக் கண்டு கவன்று "வேடித்தொண்டர் சாலவுந்தியர்; கடிதாய்க் கடற்காற்று வந்தெற்றக் கரைமேல்குடிதான் அயலேயிருந்தாற் குற்றமாமோ?" என்று பாடிய தலம். சந்நிதி கிழக்கு நோக்கியது. சிறிய அழகிய அமைதியான சூழலில் அமைந்த கோயில்.

வாயுதேவன் அமுதக்கலசத்தைத் தேவருலகிற்கு எடுத்துச் செல்லும்போது அமுதம் சிதறிக் கீழே விழ அது சிவலிங்கமாயிற்று என்பது வரலாறு. சுவாமி பெயர் அமிர்தகடேஸ்வரர் குழகேசர், அம்மை மையார்தடங்கண்ணி. அம்மையின் பெயர் வடமொழியில் 'அஞ்சனுட்சி' என வழங்கப் பெறுகிறது. காடுகிளாள் என்ற மற்ருெரு அம்மனும் உண்டு. இவரும் சுந்தரர் தேவாரத்தில் குறிப்பிடப்படுகிருர், தீர்த்தம் அமுத தீர்த்தம் என்னும் கிணறு. இது கோவில் உள் பிரகாரத்தில் உள்ளது. இத்தலத்தில் முருகனுக்குச் சிறப்புண்டு. அவரும் குழகர் என வழங்கப்பெறுகிருர். குழ–இளமை. ஆதலால் குழகர் – இளமை நீங்காதவர் முருகன் என்ற பொருளில் வந்தது முருகப்பெருமானுக்கு ஒரு திருமுகம். ஆறுதிருக்கரங்கள். அவற்றில் ஒருகையில் அமுதகலசமும், ஏனைய கைகளில் நீலோற்பலம், பதுமம், அபயம், வச்சிரம்வேல் ஆகிய பொருள்கள் உள்ளன.

முன் கோபுரம் சிறியது. அது ஆறு நிலைகளையுடையது. பெரும்பாலும் கோபுரங்களுக்கு ஐந்து, ஏழு, ஒன்பது என ஒற்றைப்பட்ட நிலைகளே அமைவது மரபாயினும் இங்கு ஆறு இருப்பது சிந்திக்தற்குரியது.

உள் பிரகாரத்தில் அமிர்தகணபதி, முருகன், கணபதிலிங்கம், சண்டேசர் முதலிய பரிவாரத் தெய்வங்கள் உரிய இடங்களில் உள்ளன. இதுவும் கோளிலித் தலமாதலின் நவக்கிரகங்கள் வரிசையாக உள்ளன.

இரண்டு காலம் பூசை நடக்கிறது. வைகாசிவிசாகத்தை முன்னிட்டு பத்து நாட்கள் முருகப்பெருமானுக்கு விழா நடைபெறும்.

தேவகோட்டை சோமசுந்தரஞ் செட்டியார் அவர்கள் லட்ச ரூபாய் செலவில் திருப்பணிசெய்து (1941 ஜூலை மாதம்) விஷு ஆண்டு ஆனி 21உ கும்பாபிஷேகம் நடத்துவித்தார்.

கோடியக்கரை தம்புச்சாமி பிள்ளை என்பவரால் யாகசாலை திருப்பணி செய்யப்பெற்றது. கோயிலுக்குப்பக்கத்தில் வேதநாயக தேசிகர் சத்திரம் உள்ளது. கோயிலுக்குக்கிழக்கே ருத்திரகோடித் தீர்த்தம் (கடல்) உள்ளது. இதில் மாசிமகம், ஆடி, தை அமாவாசைகள், அர்த்தோதய மகோதய புண்ய காலங்கள். இவற்றில் நீராடுவது மிகச் சிறந்த பயனைத்தருவது. இக்காலங்களில் லட்சக்கணக்கான மக்கள் வந்து நீராடுவார்கள். கோயிலுக்குத் தெற்கில் கோடி விநாயகர் கோயில் உள்ளது.

கோடியக்கரையில் ஒரு கலங்கரை விளக்கமும் உண்டு. யாழ்ப்பாணத்திற்கு மிக அண்மையில் செல்லலாம்.

சித்தர் கட்டம் மிகச்சிறந்த இடம். சிவன் முத்தர்களான சித்தர்கள் இன்றும் வாழ்வதாக நம்பிக்கை. திருவாவடுதுறை குருமூர்த்திகளான சித்தர் சிவப்பிரகாசர் இன்னும் சீவசமாதியில் இருப்பதாகச்சொல்லுகிறார்கள். இங்கு பார்வதி பரமேஸ்வரருடைய உருவங்கள் உள்ளன.

வடநாட்டில் நருமதை யாற்றங்கரையில் சுவேத முனிவருக்கும் சுசீலையம்மையாருக்கும் மகனைகப் பிறந்த குழக முனிவர் தன் நாடு வறுமைப்பட்டமையால் இங்கேவந்து தவஞ்செய்து இறைவனைப்பூசித்

துப்பேறுபெற்ரூர் என்பது வரலாறு. குழகமுனிவர் சிலேயும் உள்ளது. அப்பர் சுவாமிகளும் "கோடி யான் கண்டாய் குழகன் கண்டாய்" எனக் கூறுகின்ருர்கள்,

மற்றும் பிரமன், இந்திரன் முதலிய தேவர்களும், நாரதர் குழகர் முதலிய முனிவர்களும், நவகோடி சித்தர்களும் வழிபட்டதாக வரலாறு.

இவ்வூரில் தபால் நிலேயமும், தொடக்க நிலேப் பள்ளிகளும் காட்டுப்பயணிகள் தங்கும் விடுதியும் உண்டு, மக்கள் தொகை சுமார் 3000. பஞ்சாயத்து ஆட்சி அலுவலகம் உள்ளது. மிகுதியாகப் புகையிலே விளேகிறது.

இத் தலத்தைப்பற்றிய கல்வெட்டுக்கள் எட்டும், செப்புப்பட்டயம் ஒன்றும் உள்ளன. அவை அரசாங்கத்தரரால் 1904லும், 1909லும் படி எடுக்கப் பெற்றுள்ளன.

அவற்றின் சுருக்கம் வருமாறு:-

508/1904 அமிர்தகடேஸ்வர சுவாமி கருப்பக்கிருகத்து மேற்குப் பக்கச்சுவரில்; திரிபுவனச்சக்கரவர்த்தி ராஜராஜதேவர் ஆட்சியாண்டு பதினான்கில் ஒருவரால் ஒரு திருவிளக்குக்காக நிலம் அளித்த செய்தி குறிக்கப்பெற்றுள்ளது. (இக் கல்வெட்டின் இறுதிப்பாகம் கட்டிடத்தில் மறைந்துள்ளது.)

509/1904 அதேயிடம் வடபக்கம் சுவரில்: திரிபுவனச்சக்கரவர்த்தியான சுந்தரபாண்டியத்தேவர்க்கு யாண்டு ———— ஏனேய பகுதிகள் அழிந்தன.

510/1904 அதே சுவரில்:- ஜடாவர்மன் திரிபுவனச்சக்கரவர்த்தி கோனேரின்மை கண்டானுக்கு யாண்டு பதினெட்டாவது என்று தொடங்குகிறது.

இதில் கோடியக்கரையும் திருவகத்தியான்பள்ளியும் குறிக்கப்பெறுகின்றன.

511/1904 அதே சுவரில்: ஜடாவர்மனுன பராமக்கிரம பாண்டியன் ஆட்சி ஐந்தாம் ஆண்டில் ஒரு விளக்கு இடப் பொன் கொடுத்த செய்தி குறிக்கப்பெற்றுள்ளது. (முடிவு பெருத கல்வெட்டு) இவ் வரசன் கி. பி. 1334ல் முடிசூட்டப்பட்டவன். ஆகவே இவன் தானம் செய்த ஆண்டு கி. பி. 1339 ஆகக் கூடும்.

512/1904 அதே சுவரில் ஜடாவர்மன் திரிபுவனச் சக்கரவர்த்தி குலசேகர தேவன் யாண்டு முப்பத்தொன்பதில் எனத் தொடங்குகிறது. (இது முற்றுப்பெருத கல்வெட்டு) இவன் முதற் குலசேகரனு அல்லது இரண்டாமவனு என்பது அறியக்கூடவில்லை. குலசேகரன் I கி.பி. 1090 முதல் 1217 வரை ஆண்டவன். குலசேகரன் II 1839 முதல் 1851 வரை ஆண்டவன். ஆகவே ஆட்சியாண்டு 39ல் தானஞ்செய்தான் என்று குறிக்கப்பெறுவதால் குலசேகரன் I நூற்றிருபத்தேழு ஆண்டு அரசாண்டான் என்பதும் பொருந்தாது. குலசேகரன் II பன்னிரெண்டாண்டே ஆண்டான் என்பதால் ஆட்சியாண்டு 39ல் என்பது பொருந்தாது. ஆகவே இதில் ஏதோ பிழைபாடு இருக்க வேண்டும்.

513/1904 அதே சுவரில்; திரிபுவன சக்கரவர்த்தியான இராஜேந்திரன் I ஆட்சி முப்பத்திரெண்டாம் யாண்டில் நிலம் அளித்தான் என்பது.

514/1904 ஷை ஆண்டில் முற்குறித்த செய்தியே குறிக்கப்பெற்றுள்ளது.

515– இது குருக்களிடம்உள்ள செப்புப்பட்டயம் அதில் இராசஇராசேந்திர சோழ இராசர்கள் சகம் 1208ல் அதற்குச் சரியான கலியுகாதி 4374. ஜய

ஆண்டு அருச்சகருக்குச் சில உரிமைகள் வழங்கப் பட்டதாக உள்ளது. இப்பட்டய எழுத்து மிகமிகப் பிற்காலத்ததாகத் தெரிகிறது. அன்றியும் இடை யிடையே வரி பிளந்து சிறிய எழுத்தால் மூன்றுவரி கள் சேர்க்கப் பெற்றுள்ளன. இராச இராசேந்திர சோழ இராசர்கள் என்பது ஒரு அரசன் பெயராக அறியக்கூடவில்லை. ராஜராஜேந்திரன் என்பது முதற் குலோத்துங்கனுடைய விருதுகளில் ஒன்றாகஉள்ளது என்று **M A D: E. B, R. E,** 1905 **Page** 54 பாரா **21** கூறுகிறது,

1–1/1909. இது தேவநாகர எழுத்திலும், மராத்தி யிலும் வெட்டப்பட்ட கல் எழுத்து. கடற்கரை சித்தா ஸ்ரமத்திற்குப் பக்கத்திலுள்ள தளவரிசைக்கல்லில் உள்ளது. தஞ்சாவூர் பிரதாபசிம்ம மகாராஜாவின் மகனான துளசா மகாராஜா (கி.பி. 1763–1787) செய்த தானத்தைக் குறிக்கிறது. மேலும், இதில் அரசகுருவும் அத்வைத அக்ரேசரரும் ஆன சேது பாவா சாமியின் மகன் நானுகோசாமி என்பவரும் **(Tanj Ga.** 2 **R Vol I. Page** 49.)

இவைகளால் கோடிக்குழகர் கோயில் சோழமன் னர்களாலும், பாண்டிய மன்னர்களாலும், பின்னர் மராத்திய மன்னர்களாலும் நில முதலியன வழங்கப் பெற்று பாதுகாக்கப்பெற்றது என்பதை அறியலாம்.

தோப்புத்துறை ஸ்ரீ வரதராஜப்பெருமாள் கோவில்:-

வேதாரணியம் புகைவண்டி நிலையத்திலிருந்து வடக்கே இரண்டு கல் தொலைவில் உள்ள புகைவண்டி நிலயம் தோப்புத்துறை. இத்தலத்திற்குச் சேது மாதவபுரம் எனவும் பெயர் உண்டு. இங்குள்ள பெரு மாளுக்கு சேதுமாதவன், வேதநாராயணன், வரத ராஜன், அபீஷ்ட வரதப்பெருமாள் முதலான பெயர் கள் உண்டு. நாச்சியார்—பெருந்தேவி நாயகியார்.

தீர்த்தம்—ராமபுஷ்கரணி, இங்கு ஆவணி மாதத்தில் பத்துநாட்கள் திருவிழா நடைபெறும்.

இங்குக் கைலாசநாதர் கோயில் என்ற சிவாலயமும் ஒன்று உண்டு. இத்தலம் பழமையான துறைமுகங்களில் ஒன்று. வாணிபத் தலம். இங்கு அடப்பாறு என்ற ஓர் ஆறு ஓடுகிறது.

கோடியக்காட்டு முகத்துவாரத்தில் ஸ்ரீ ராமபிரான் சேதுபந்தனம் செய்ய நின்று பார்த்த இடம் என்ற ஒன்று உண்டு. அது ஸ்ரீ ராமபாதம் என வழங்குகிறது. மணல் மேடு. அதன் உச்சியில் ஒரு சிறு மண்டபமும் அதில் ராமபாதங்களும் உள்ளன.

சிவமயம்.

வேதாரணிய புராண வரலாறு.

முன் ஒரு பிரம கற்பத்திலே பிரமன் படைப்புத் தொழிலைத் தொடங்கிய காலத்திலேயே தேவர்கள் அசுரர்கள், மக்கள் அரக்கர்கள், சிங்கம் யானை, புலி மான், பாம்பு எலி என்ற மாறுபட்ட உயிர்கள் உண்டாகி உலகத்தை வருத்தத் தொடங்கின. திருமால், அரக்கர்களால் மக்களுக்கு உண்டாகுந்தீமைகளை உணர்ந்து அவர்களை அழிப்பதற்காக ஆதியிராமனாக அவதரித்தார். இலங்கை சென்று இராவணனையழிப்பதற்கு எண்ணினார். எளிமையாகக் கடலை கடந்து செல்லும் இடம் எது என்று ஆராய்ந்தார். இத்தலமே சிறந்ததென்று இதனையடைந்தார். தம்முடன் வந்த வானர வீரர்களைக்கொண்டு அணை கட்டினார். இலங்கை இராவணனைக் கொன்று சீதா பிராட்டியை மீட்டு அயோத்திக்குத் திரும்பினார். வழியில் அணை மீது வரும்போது இராவணனைக்கொன்றபிரமகத்திதோஷம் பிரம ராக்ஷசனாக இராமனைப் பற்றியது. அதனால் இராமபிரானுடைய வடிவமும், குணமும் செயலும் மாறின. இராமன் மனஞ்சோர்ந்து நின்றார். இந்நிலையை முனிவர்கள் கண்டனர். ஐயோ! காவற்கடவுளாகிய திருமாலுக்கும் இக்கதி உண்டாயிற்றே! என்று கண் கலங்கினர். திருமாலைக்கண்டு, பெருமானே! தாங்கள் தேவர்கள் துயரம் போக்க இராவணனைக் கொன்றீர்கள். பிறர்க்கு உபகாரஞ் செய்யப்போன தங்கட்கு இக்கதி உண்டாய்விட்டதே! இதற்கு ஒரே ஒரு பரிகாரம்தான் உண்டு. அதனை நாங்கள் சொல்கிறோம். தாங்கள் கேட்டருளவேண்டும் என்று வேண்டிக்கொண்டனர்.

திருமால் முனிவர்களைப் பார்த்து, முனிபுங்கவர்களே! யான் படுகின்ற துன்பத்திற்கு இரங்கி நீங்கள் சொல்லும்போது அதனை நான் தட்டுவேனா? விரைந்து சொல்லுங்கள் கேட்கிறேன். அதன்படி நடக்கிறேன் என்றார்.

முனிவர்கள், பெருமானே! தாங்கள் செய்த சேது மூலத்திலே தாங்கள் இருந்து சி பஞ்சாச்சரத்தை ஓதி சிவபெருமானையே தியானித் திருந்தால் இப்பாவம் நீங்கும். எங்கள் வார்த்தையை உண்மையென நம்பி வழிபட்டால், 'சிவபெருமான் எழுந்தருளிவந்து இப் பாதகத்தைப் போக்குவார்; என்றும் மாறாத பேரின்பத்தை உதவுவார் என்றனர்.

ராமபிரான் முனிவர்கள் உபதேசப்படி, மீளவும் அரக்கர்கள் துன்புறுத்தாவண்ணம், தன் வில்லால் மூன்றிடங்களில் தகர்த்துக்கடலாக்கி அறுபத்தெண்ணாயிரம் முனிவர்களோடும் தவம் செய்வதற்கு உரிய சித்தித்தலம் எது என ஆராய்ந்தனர்,

அப்போது முனிவர்களுக்குத் தலைவரானஜாபாலி என்பவர் இராமபிரானைப் பார்த்து இச்சேதுவிற்கு வடக்கே அண்மையில் சத்தியகிரிஎன்ற மலையொன்று உண்டு. அதிலே சத்தியநதி என்ற ஓர் ஆறும் ஓடுகிறது. நீங்கள் சேதுபந்தனம் செய்த காலத்தில் அந்த ஆறு கடலொடு கலந்து விட்டது. அந்த நதி கடலில் வடக்கு நோக்கி (உத்தரகாமியாக) ஓடிக் கொண்டிருக்கிறது. தேவரீர் அதில் நீராடி அந்தமலையில் தவம் புரிந்தால் இறைவன் வெளிப்படுவார். வேண்டிய வரங்களைத்தருவார். இந்தப் பழியையும் நீக்குவார் என்றனர்.

இதனை இராமபிரான் கேட்டு நியமந் தவறாமல் அங்ஙனமே தவஞ் செய்தார். சிவபெருமான் தவத்திற்கு இரங்கி பங்குனி மாதத்திலே பூர்ணிவையும்

உத்தரநாளும் கூடிய நன்னாளிலே உச்சிப்போதிலே மணிகர்ணிகை யென்னும் தீர்த்தத்துடனே சிவலிங்க உருவாய்த்தோன்றினார்'. அதனோடு பாம்பும், கங்கை நதியும், தாங்கிய திருமுடியோடு ஆயிரஞ்சூரியர் ஒருங்கு தோன்றினார் போன்ற ஒளியுருவமாய் மானு மழுவும் தாங்கிக் கொன்றை மாலையோடு சகலத்திரு மேனியுங் காட்டியருளினார். இராமன் சிவபெருமான் திருவுருவைக் கண்டு கண்கள் ஆனந்தநீர் சொரிய மெய் தடுமாற நாக்குழறப் பணிந்தார். சிவானந்தக் கடலில் மூழ்கினார். சிவபெருமான் 'இராமா நீ செய்த பிரமகத்தி முதலான பாதகங்கள் தொலைந்தன. உன் பழியைப் போக்குதற்காகவே நாம் மணிகர்ணிகை என்னும் தீர்த்தத்தோடு வந்தோம். இதில் மூழ்கினோர் பாவங்களனைத்தும் நீங்கும் என்றருளிச்செய்தார். திருமால் அதில் நீராடிப் பிரமகத்தி நீங்கப்பெற்றார். பெருமானே இதில் நீராடித் தேவரீரை வழிபட்டவர்கள் என்றும் என்னைப்போல இன்பமார்ந்திருக்கத்திருவுளங்கொள்ள வேண்டும் என்று வேண்டிக் கொண்டார். இறைவனும் அவ்வாறே ஊழி பெயரினும் உலகம் அனைத்தும் அழியினும் அழியாத இத்தலத்தில் இம்மேனியில் என்று இருந்து அருள் செய்வோம் என்றுகூறி வேதநதியின்மேல்பால் கிழக்கு பார்த்த சந்நிதியாகச் சிவலிங்கத்திருமேனியுடன் எழுந்தருளினார்.

இவ்வண்ணம் ஆதிராமன் வழிபட்ட ஆதிசேதுவாக இத்தலம் விளங்கியது. பிரமவூழியினும் அழியாதது. வேதம், ஆகமம் முதலான ஒலியுலகமும், சரம் அசரமான பொருட் பிரபஞ்சங்களும் இதில் ஒடுங்கும். உலகம் மீளவும் படைக்கப்படுகின்ற காலத்து இவ்விலிங்கத்திருமேனியினின்றும் சிவபெருமான் வெளிப்பட்டு வேதாகம ஒழுங்குகளைப் பிரமனுக்கு உபதேசிப்பார்.

பிரமன் ஒருகாலத்துப் படைப்புத்தொழில்கைவர வேண்டி இத்தலத்தை யடைந்து சிவபெருமானை நோக்கிக்கடுந்தவம் புரிந்தான். நெடுங்காலம் பிறர் எவரானும் செய்தற்கரிய தவத்தைச் செய்தும், பெருமான் வெளிப்படாமையைக் கண்டு தன் தலைகளில் ஒவ்வொன்ருக அறுத்து யாகஞ்செய்வேன் என்று உறுதிபூண்டுத் தென்றிசையிலே கோடிக்கரையை யடைந்தான். அங்கே சிவலிங்கத் திருமேனியாகிச் சிவபெருமான் பேரொளிப் பிழம்பாக விளங்கக்கண்டான். கண்களில் நீர்வழியத் திருவடியில் வீழ்ந்து பணிந்து பெருமானே! சிருட்டித்தொழில் கைவரத் திருவருள் புரியவேண்டும் என்று வேண்டினன்.

சிவபெருமான் நான்முகனை நோக்கி 'உன்தவம் எம் நெஞ்சைக் கனியச்செய்தது. எவ் வரமாயினும் கேள் அருள்வோம்' என்றனர். பிரமன் தான்கருதிய வண்ணம் உலகைப் படைக்கும் உபாயத்தை அருள் செய்யவேண்டும் என்று வேண்டிக்கொண்டான்.

சிவபெருமான் அதனைக் கேட்டுப் புன்முறுவல் பூத்து, 'பிரம' ஊழிக்காலத்து வேதங்களனைத்தும் எம் பால் அடங்கின. அவ்வேதங்களில் அன்றே உலகத்தைப்படைக்கும் உபாயங்கள் அனைத்தும் ஒருங்கியுள்ளன. நீ வேதப்பொருள்களை யுணராமல் உலகை படைப்பது எப்படி என்ருர்.

பிரமன், பெருமானே! வேதப் பொருள்களை உள்ளவாறு உணரும் உண்மை ஞானத்தையுதவ வேண்டும் என்று வேண்டிக்கொண்டான். சிவ பெருமானும் வேண்டுகோளுக்கு இரங்கி வேதங்களை உபதேசித்தார். பிரமன் கேட்டு மனமகிழ்ந்து, பெருமானே என்றும் இவ்விலிங்கத்தில் எழுந்தருளியிருந்து ஒவ்வோரூழி முடிவிலும் இவ் வண்ணமே அருள்செய்தல் வேண்டும் என்று வேண்டிக்கொண்

டான். பெருமானும் அவ்வாறே ஆகுக என வரம் தந்து சிவலிங்கத்தில் மறைந்தனர். ஆதலால் இவ் விலிங்கப் பெருமானை நினைத்தாலும், துதித்தாலும் கண்டாலும் பாவங்கள் தொலையும். ஆனந்தமய மான முத்தி சித்திக்கும். பேரூழிக்காலம் ஒவ்வொன் றிலும், உலகம் அனைத்தும் இச்சிவலிங்கத்தினிடத்தே ஒடுங்கி மீளத்தோன்றும். ஆதலால் இந்தச் சிவலிங் கத்தின் மேன்மையைச்சொல்ல வல்லவர் யாரும் சிலர்.

முத்தியையும் உலகங்களைப் படைத்துக் காக்கும் முதன்மையையும் புத்திரர், மனைவி முதலான போக போக்கியங்களையும் விரும்பினவர்கள் இந்தஇலிங்கப் பெருமானைக் காணவும் வேண்டாம்; மனத்தால் உண் மையன்புடன் நினைத்தாலேபோதும். அப்படியிருக்க வந்து தரிசித்தாலும், வலம் வந்தாலும், வழிபட்டா லும் அவர்கள் எய்தும் பயனுக்கு ஓர்எல்லையேஇல்லை. நினைத்தவற்றை நினைத்தவண்ணமே அடையலாம்.

சோம சூத்திர பிரதட்சிணம் செய்தால் ஒரு பிர தட்சிணம் இரண்டு இலக்கப் பிரதட்சிணம் செய்வதன் பயனை அளிக்கும். தரிசனம் கோடி பிரதட்சிணைப்பய னைக்கொடுக்கும். அங்கப் பிரதட்சிணம் ஒன்று செய் தால் நூறுகோடி புண்ணியப்பயனைக்கொடுக்கும்.

பத்தியோடு அரனைப் பூசை செய்யாதவர்களாயி னும் வேதவனத்தீசனை ஒருமுறை வலஞ் செய்தாற் போதும். நூறுண்டு பூசித்த பயனை அடையலாம்.

வேதவனநாதன் பொன்னையும், நெல்லையும், பூமி யையும், பொருள்களையும் கவர்ந்தவர்கள் நரகத்திலே கற்பாந்த காலம் கிடந்து வருந்துவர். பூமியிலே வறி யராய், ஊமைகளாய், பித்தராய் பிறந்துழல்வர்.

மணி கன்னிகையின் வரலாறு.

காசியிலுள்ள மணிகன்னிகா கட்டம்போலத்திரு மறைக்காட்டிலே இறைவனருளிய தீர்த்தம் மணி

கர்ணிகை. இக்குளம் இறைவனுடைய வலக்கண்ணைப்போலப் புறமதிலின் ஓரமாக விளங்குவது. இதில் நீராடினால் பிரமகத்தி முதலான பாவங்கள் அனைத்தும் அகலும்.

இராமபிரானுக்காக இறைவனோடு உச்சிக்காலத்துத்தோன்றியதால் இக்குளத்தில் உச்சிக்காலத்தில் நீராடுவதே சிறப்பு. காசி மணி கன்னிகையில் காலையில் நீராடுவதும், இத்தலத்து மணி கன்னிகையில் உச்சியில் நீராடுவது ஒத்த சிவபுண்ணியமாம். இத்தீர்த்தத்தில் ஏதாவதொன்றை மனத்தில் எண்ணி நீராடினால் நினைத்தகாரியம் நிறைவேறும். ஒன்றையும் நினையாமல் நிஷ்காமியமாக நீராடினால் முத்தி சித்திக்கும்.

ஞாயிற்றுக்கிழமையிலே நண்பகலிலே க்ஷமா யோகத்தில் நீராடி கொப்பூழ் அளவு நீரில் நின்று சிவபெருமானிடம் இடையறா அன்புகொண்டு திருவைந்தெழுத்தைப் பன்னீராயிரம் உரு ஓதினவர் சித்தராவர். அவர்களைத் தரிசித்தவர்கட்கும் பிறவிநோய் நீங்கும்.

தைமாதத்திலே விடியற்காலையில் நீராடினவர்களுக்கு எமவாதனை இல்லை. அவர்கள் மறுபிறவியில் தேவர்கள் ஆவார்கள். மாசி மாதத்திலும் ஏனைய புண்ணிய காலங்களிலும் மூழ்கினவர்கள் சிவப்பேறெய்துவர்.

கங்கை முதலான புண்ணியநதிகள் யாவும் மக்கள் தம்மிடம் முழுகிப் போக்கின பாவம் தொலையும்படித் திருக்கைலைக்குச் சென்று சிவபெருமான் திருமுன்பு வணங்கி வேண்டிக்கொண்டன. இதனைக் கேட்ட சிவபெருமான் நதிகள்மீது மனமிரங்கி, தெற்கே வேதவனம் என்ற ஒரு தலம் உள்ளது. அங்கே மணி கன்னிகை என்ற ஒரு தீர்த்தம் இருக்கிறது. அங்கே சென்று நீங்கள் அனைவரும் மகா

சிவராத்திரி தினத்திலே நீராடி எம்மையும் வணங்குங்கள். உங்களிடம் குவிந்துள்ள பாவங்கள் அனைத்தும் விலகும்.

தேவர்கள், மாதந்தோறும் வரும் சிவராத்திரிகள் தோறும் வேதவனம் வந்து மணிகர்ணிகையில் நீராடி மறைவனநாதரை வழிப்பட்டுத்தத்தம் பதவிகளைக் காப்பாற்றிக்கொள்கின்றார்கள். ஆதலால் நதிகளே நீங்களும் மணிகர்ணிகையையடையுங்கள்; நீராடுங்கள்; என்றருளினார். நதிகள் யாவும் அவ்வாறே சிவராத்திரியில் வந்து மூழ்கும். கங்கைநதியோ நாடோறும் இதில் வந்து நீராடி இறைவனை வழிபட்டுச் செல்லும்.

இத்தீர்த்தத்தில் ஒருமுறை நீராடினால் பலஆண்டுகள் யோகம், தவம், யாகம், தானம் செய்தபயன்களையெல்லாம் யெய்தலாம், மணிகர்ணிகையில் ஆடாமல் கங்கை முதலிய புண்ய நதிகளில் எத்தனைமுறையாடினும் பயன் இல்லை. இதனை விளக்க ஒருவரலாறு கூறுவோம்: கேட்பாயாக.

மலைநாட்டிலே கௌண்டின்ய கோத்திரத்திலே பிறந்த திரிபுராரி என்ற பிராமணன் ஒருவன் கங்கையில் மூழ்கக் காசியை அடைந்தான். கங்கைக்கரையைச்சார்ந்தான். அங்கொரு பெண் தோன்றினாள், அவளைக்கண்ட அந்தணன் நீயார் இங்குத் தனியே வந்தது எதற்கு? எங்குச் செல்கின்றாய் என்று கேட்டான்.

அப்பெண் அவனைப்பார்த்து, என் பெயர் யமுனை நதி. சிவராத்திரியில் மணிகன்னியில் மூழ்குவதற்காகத் திருமறைக்காடு செல்கின்றேன்; அதிருக்கட்டும்; நீர் யார் எங்குவந்தீர்? அதைச் சொல்லும் என்று கேட்டாள்.

திரிபுராரியாகிய அந்த அந்தணன் தன் வரலாற்றைக் கூறினான். யமுனை கேட்டு, அப்படியாயின், நீ வேதவனஞ் சென்று மணிகர்ணிகையில் நீராடு; உன் பிறவி தொலையும்; முத்தியை அடையலாம். என் சொல்லை மறுத்து நீ கங்கையில் ஆடுவாயாயின், அவளும் உனக்கு காட்சி வழங்கமாட்டாள்; அவளும் நாடோறும் சென்று மணிகன்னிகையில் ஆடிவருகின்றாள். ஆதலால் முதலில் மணிகன்னிகையில் ஆடு என்றாள். அந்தணன் அதனைக்கேட்காமல் கங்கையாடச் சென்றான். நடந்தான்; நடந்தான்; நெடுந்தூரம் போயும் காசியையுங் கண்டானில்லை கங்கையையுங் கண்டானில்லை. அலைந்து திரிந்து அலுத்துப்போய் ஒரு மரத்தடியில் இருந்தான். அப்போது கங்காதேவி அசரீரியாக 'என் சகோதரியாகிய யமுனை சொல்லியும், நீ அதனை நம்பாமல் வந்து வருந்துகின்றாய் திரும்பிச்சென்று மணிகன்னியில் முழுகு. பிறகு வா. அப்போதுதான் நீ என்னைத் தரிசிக்கலாம். முழுகலாம் என்று கூறினாள். அந்தணன் அதைக்கேட்டு, அதிசயித்து விரைந்து வேதவனம் வந்து மணிகன்னியிலும் வேதநதியிலும் கோடிதீர்த்தத்திலும் விதிப்படி நீராடினன். வேதநாதரை வழிபட்டான். வடக்கே காசிக்குப்போகப் புறப்பட்டான். கங்கையும் காட்சித் தந்தாள். உடனே அந்தணன் வியந்தான்.

தென்தேசத்திலே கவுசிகன் என்னும் ஒரு பிராமணன் இருந்தான். அவன் கங்கையில் மூழ்கிக் காவடிக் கட்டிக்கொண்டு தனியே வழி நடந்து வந்து கொண்டிருந்தான். வழியிலே விந்திய மலைக்காட்டிலே யமனைப்போலே இரண்டு வேதாளங்கள் வந்து வழியை மறித்தன. இவனோ சிவபஞ்சாச்சரத்தை ஓதிக்கொண்டேயிருந்தபடியால் இவனையணுக முடியாமல் எட்டி நின்று, அந்தணரே! உம்மைப் போன்ற சிறந்த தவமுடையாரை நாங்கள் கண்டதில்லை. இந்த வழியில் வருகின்றவர்களை நாங்கள்

கொன்றுதின்போம். நீரோ சிபஞ்சாச்சரத்தைச்செவிப்பதால் அணுகவுமாட்டாமல் எட்டி நின்றோம். எத்தனை நாளைக்கு நாங்கள் இந்த வேதாள வடிவமுடன் வருந்துவது. இக்கொடியபிறவி நீங்கும்படியான உபாயம் ஒன்றைச்சொல்லும் என வேண்டின.

அதைக்கேட்ட அந்தணன் நீங்கள் யார்? இந்த வடிவத்தை என்ன பாவத்தைச்செய்து பெற்றீர்கள்? வரலாற்றைக்கூறுங்கள் என்றான்.

பேய்களில் ஒன்று, அந்தணனை நோக்கி, 'நான் காமரூபதேசத்தில் வாழ்ந்த அந்தணன்; என்றால் குடும்ப பாரம் தாங்கமாட்டாமையால் தகுதியற்ற வேளாளனிடம் தானம் வாங்கினேன்; கூலிபெற்றுக் கொண்டு வேதங்களைச் சொல்லிக்கொடுத்தேன்; ஆதலால் பேய்வடிவம் பெற்றேன் உம்மால்தான் இந்த வடிவம் நீங்கி உய்யவேண்டும்' என்று சொல்லியது.

பக்கத்தில் நின்றுகொண்டிருந்த மற்றொரு பேய், அந்தணர்பெருமானே! நானோ கலிங்க தேசத்திலே அந்தணர் குலத்திலே உயர்ந்த குலத்திலே பிறந்தேன் வேதாவேதங்களைப்படித்தேன்; ஆனாலும் காமத்தீ என்னைப்பற்றச் சொத்துக்களைத் தொலைத்தேன். பசி வாட்டியது; தாய் தந்தையர்களையும் பாதுகாவாமல் கைவிட்டேன்; காசிக்கு ஓடினேன். வேறொரு பிராமணன் வீட்டிற்கு யாசகன் போலச்சென்றேன், அந்தப் பிராமணன் தலையில் கல்லைப்போட்டுக் கொன்றேன். அவனுடைய செல்வங்கள் அனைத்தை தையும் கவர்ந்தேன், ஓடினேன்; காவலர்கள் என்னைப் பிடித்துக்கொண்டார்கள். சிறைக்கு அழைத்துச் சென்று நையப்புடைத்தார்கள்; என் தலையையறுத்தார்கள். பிரமகத்தி பொன்னைத் திருடியது, துன் மரணம் ஆகிய பாவங்களைச் செய்ததால் இந்தப் பேயுருவைப்பெற்றேன். இந்த வடிவம் உம்மாலன்றி நீங்காது என்பதை உணருகிறேன். தேவரீருக்குப்

'பிறர்துன்பம் போக்குதலே அறமும் புகழும் ஆம்' என்றது.

அந்தணன் பேய்கள் கூறியதைக்கேட்டு பேய் களே! நான் உங்களுக்குச் செய்யவேண்டியது என்ன என்று கேட்டான்.

பேய்கள், அந்தணரே தேவரீர் எம்முடன் காசிக்கு வந்து கங்கையில் மூழ்கி எங்களுக்காகக் கயையில் கடன்களைச்செய்தால் பழய வடிவம் எங்களுக்கு உண்டாகும் என்றன.

அந்தணன் அவ்வாறே செய்தான். அப்போது காமரூப தேசத்தில் பிறந்த அந்தணப் பேய்க்கு முத்தியுண்டாயிற்று. கலிங்கதேசப் பேய்க்கு பாவ மிகுதியால் முத்தி விளையவில்லை.

காமரூப தேசத்தவன் அந்தணனை வணங்கி எனக்கு நீ செய்த உபகாரத்திற்கு யான் செய்யும் கைம்மாறு என்ன இருக்கிறது. தேவரீருக்கு இம்மை வறுமையிரண்டிலும் இன்பமே விளைக என்று ஆசிக் கூறிக் கைலையைச்சேர்ந்தது.

கலிங்கதேசப்பேய் அந்தணனைப்பார்த்து, அந் தண! யான் முன் பிறவியில் கங்கை கரையில் பிரா மணனைக்கொன்றேன்; அந்தப்பாவமும் இன்று சேர்ந்துகொண்டது. அதனாலே எனக்கு முத்தி யுண்டாகவில்லை. ஆதலால் தென்திசையில் உள்ள வேதாரண்யத்திற்குச்சென்று மணிகர்ணிகையை நீராடி, பிதுருக்களுக்கு இயன்ற அளவு தில தர்ப்பண தானாதிகளைச் செய்யின், இந்தப் பேயுருவமட்டு மல்ல முன்செய்த பாவங்களும் தொலையும். பழைய வடிவமும் வரும். முத்தியும் பெறலாம் என்றது. இதைக்கேட்ட அந்தணன் கலிங்கப்பேயோடு வேதா ரண்யம் வந்தான். பேய்க்காகவே நீராடினன். பிதிருக்

கடன்களைச்செய்தான். வேதநதியிலும், கோடித்திர்த் தத்திலும் முழுகினன். வேதாரணியேசரை வணங்கி இந்தப்பேய் உற்ற துன்பங்களைப் போக்கி அருளுக என வேண்டினன். வேதநாதர் திருவருளால் பேய் தன் வடிவம்பெற்று மோட்சத்தையும் பெற்றது. அந் தணனை வாழ்த்திச் சிவபதம் சேர்ந்தது.

கங்கையில் மூழ்கியும் போகாத பாவம், ஒருவருக் காக ஒருவர் மணிகன்னிகையில் ஆடப்போயிற்று என்றால் மணிகர்ணிகையின் பெருமை எத்துணைப் பெரியது. இந்தக்குளக்கரையிலே, எதைக்கொடுத்தா லும் ஒன்று அநந்தமாகும். பிதிருகடன் ஒன்று செய் தாலும் கோடியாகிப் பெரும்பயன் தரும்.

வேதநதிப் பெருமை,

சிவபெருமான், மக்களனைவரும் ஒழுங்கு, வரம்பு இவற்றைக் கடவாமல் ஒழுகுவதற்காக வேதங்களை யும், ஆறு அங்கங்களையும், ஆகம புராணங்களையும் அருளிச்செய்தார், அவற்றைச் சத்தியம் சீலம், தவம் ஒழுக்கம் இவைகளிலிருந்து சிறிதும் நழுவாதவர்களும் தானம் வழங்குதல், பிறரன்னத்தைப் புசித்தல், களவு கள் காமம் விரும்பாதவர்களும், வாணிகம், அரசாங் கச்சேவகம், அடுத்த நாளைக்கு என்று பொருளைப் பாதுகாத்து வைக்கும் ஆசை முதலிய குற்றங்கள் இல்லாதவர்களுமான அந்தணப் பெருமக்கள் ஓதி, அவற்றிற்சொல்லப்பட்டபடியே நடந்து, ஏனைய மக்க ளுக்கு வழிகாட்டியாக விளங்கி வந்தனர். காலம் போகப்போக அந்த அந்தணர்களேநியமங்கள் தவறிச் சீவனத்திற்காக வேதங்களை ஓதத் தலைப்பட்டனர். அதனால் வேத மந்திரங்கள் தம் வலிமையிழந்தன. அதனையறிந்தவேதங்கள்நான்கும் மனித உருகொண்டு இறைவனை வழிபட்டு இழந்த வன்மையை மீளவும் பெற விரும்பின. சத்தியகிரியென்ற பழைமையான பெயரையுடைய இத்தலத்தை அடைந்தன, சத்திய

கிரியில் வாழும் சம்புவை வழிபடத்தொடங்கின. வேத நாதனுக்கு வடக்கே நூறுவில்கிடை தூரத்திலே தம் பெயரால் வேதாமிருதம் என்ற பெரிய ஏரியை வெட்டின. நாள்தோறும் அதில் நீராடி மணிகர்ணி கையில் மூழ்கியும், கடலில் மூழ்குதற்குரிய காலங் களில் சத்தியநதியாகிய கடலில் ஆடியும், சிவகாம நெறி தவருமல் சிவபெருமானை வழிபட்டு வந்தன. பூசைக்கு உகந்த பெருமானுகியவேதவனப்பெருமான் ஒரு மார்கழி மாதம் வியதிபாத புண்ய காலத்திலே விடியற்காலையிலே சிவலிங்கத் திருமேனியிலிருந்து உருவமாக வெளிப்பட்டு, வேதங்களை நோக்கி ஏ வேதங்களே! நீங்கள் பல ஆண்டுகளாக உள்ளன் புடன் பூசித்து வந்தமைக்கு உவந்தோம். உங்களைப் போல யார் வழிபட்டாலும் அவர்கள் விரும்பிய வரங் கள் அனைத்தையும் அருளவே இங்கு எழுந்தருளி யிருக்கிறோம். உங்களுக்கு வேண்டிய வரங்களையும் கேளுங்கள் என்றருளிச் செய்தார். வேதங்கள் சிவ பெருமானை நோக்கி, அன்பர்க்கு இரங்கும் அருள் வள்ளலே! எங்களுக்குத் தேவரீர் திருவருளால் ஒரு குறையும் இல்லை. ஆனாலும், பெருமானே! தங்கள் விருப்பின்வண்ணம் சிலவரங்களை வேண்டிக்கொள்ளு கிறோம்.

எங்களுக்கு ஓராசை; எப்போதும்இப்படிப்பூசை செய்துகொண்டே நாங்கள் இங்கேயிருக்கவேண்டும். பல பிரமகற்பங்கள் வந்தாலும் நாங்கள் இத்தலத்தி லேயே புல்லாகிப் பூடாகி, மரமாகிப் பல்மிருகமாகிப் பறவையாகிப் பாம்பாகி எல்லாப்பிறப்புங்கொண்டு வாழ வேண்டுகிறோம். எந்தப் பிறவி எடுத்தாலும் தேவரீரைத் தரிசித்தலும், பூசித்தலும் போற்றுதலுமே எங்கள் தொழிலாகவேண்டும். அதனால் இந்தத்தலம் எங்கள் பெயரால் வேதவனம், வேதாரண்யம், மறைக் காடு என்று வழங்கப் பெறுதல் வேண்டும். ஆறு வேதநதி எனவும், குளம் வேதாமிர்தம் எனவும், இறை

வன் வேதாரண்யேசர் எனவும், அம்மை வேத நாயகி எனவும் வழங்கப்பெறுதல் வேண்டும். ஏன் இங்குள்ள எல்லாவற்றிற்கும் எங்கள் பெயரின் இணைப்பு இருத்தல் வேண்டும். ஆண்டுதோறும் இந்த மகா வியதீபாத யோகத்தில் எவராக இருப்பினும், வேதாமிர்தம் வேத நதிகளில் மூழ்கித் தேவரீரைத் தரிசிப்பார்களாயின் அவர்கள் இம்மை யின்பத்தையும், மறுமையில் முத்திப்பேற்றையும் அடைந்தருள வேண்டும். இத்தகைய வரங்களையருளிச் செய்ய வேண்டும் என வேண்டிக்கொண்டன.

சிவபெருமான் வேதபுருஷர்களின் தன்னலங்கலவாத தாராள மனப்பான்மையை எண்ணி வேதங்களே உங்கள் பெயர் எங்கும் விளங்க வேண்டும் என்றமட்டும்உள்ளீடாகக்கொண்டுஎல்லாரும்என்றும் இன்புற்றிருக்க விரும்பும் உங்கள் பண்பைப்பாராட்டுகிறோம். அங்ஙனமே வரந்தந்தோம். நீங்கள் ஆசாரசீலர்களாய் நல்ல பரம்பரையில் வந்தவர்களாய், நியமம் தவறுதவர்களாய் விளங்கும் அந்தணர்களின் வாயில் எப்போதும் நிறைந்த மந்திர பலத்தோடு வாழ்க. உங்களை அங்கங்களோடு ஓதினவர்கள் யாராகயிருந்தாலும் அவர்களும் நம்மால் அருளப்பெறும் பதவிகளை யடைவார்கள் என்று திருவாய் மலர்ந்துசிவலிங்கத்தினிடமாகவே மறைந்தருளினர்.

சத்தியகிரியாகிய கோடிக்கரை மலையிலிருந்துண்டான சத்தியநதியானது சந்நிதிக் கடலாகிய வேத நதியுடன் பத்து யோசனை தூரம் வரை கலந்து நிற்கிறது. அந்நதியை நினைந்தவர்களும், தீண்டியவர்களும், மூழ்கினவர்களும், சீவன் முத்தராவார்கள். வேதநதியிலே முழுகி வேதவனேசனை வழிப்பட்டவர்கள் நீண்ட ஆயுளையும் சிவஞானத்தையும், வேண்டிய பொருள், பொன், பெண்டு மனை அனைத்தையும் பெறுவார்கள், இந்நதியிலே வேதங்களே வந்து முழுகுமாறல் கங்கை முதலான புண்ணிய நதிகளும் தத்தம்

பாவங்களைப்போக்க மூழ்குமானால் இதன் பெருமை எவ்வளவு என்று கணக்கிட்டுச் சொல்ல இயலுமா?

வைவஸ்தமனுவின் ஆட்சிக் காலத்திலே நாரத முனிவர் தேவலோகத்தை விட்டு இத்தலத்திற்குவந்து வேதநதியில் நீராடி வேதவனேசரை வழிபட்டுக் கொண்டிருந்தார். ஒருநாள் இராவணன் வந்தான். முனிவரைக்கண்டான். முனிவர் பெருமானே தாங்கள் இங்கு வரக்காரணம் யாது என்று கேட்டான். நாரத முனிவர் இது சிறந்த புண்ணியத் தலம். இதில் ஓடுகின்ற புண்ணிய நதி வேதநதி. இதில் சிவபெருமானும் பார்வதியும் எப்போதும் எழுந்தருளியிருந்து காட்சி வழங்குகிறார்கள். ஆதலால் இதில் நீராட வந்திருக்கிறேன் என்றார். இராவணன் அதைக்கேட்டு ஆச்சரியம் அடைந்தவனாகி இதன் பெருமையை விளக்குதல் வேண்டும் என வேண்டிக்கொண்டான். நாரதர் இராவணா, முன்னொரு காலத்திலே இத்தலத்திலே மாணிமாதன் என்ற ஒருபிராமணன் வாழ்ந்து வந்தான். அவன் நாள் தவறாமல் வேத நதியில் நீராடிச் சிவபெருமானைப் பூசித்து வந்தான், பெருமான் அவன் எதிரில் தோன்றி அந்தணா! உன் நியமங்கண்டு மகிழ்ந்தோம். உனக்கு வேண்டிய வரங்களைக்கேள் அருளுவோம் என்றார், பிராமணன், பெருமானே பிராமணனுக்கு என்ன தேவை யிருக்கிறது தேவரீர் அருளியதை வைத்துத் திருப்தியாக வாழமாட்டாதவன் பிராமணனாக இருக்கமுடியுமா? ஆகையால் என்னளவில் தேவையொன்றுமில்லை. ஆனால் யான் அடைந்த இந்த பாக்கியத்தை எல்லாரும் பெற வேண்டும். அதற்காகத் தாங்கள் கணபதி, சுப்பிரமணியர், அம்பிகை, எல்லாரோடும் என்றும், எக்கணமும் சாநித்யமாக எழுந்தருளி யிருக்க வேண்டும் என்று வேண்டிக்கொண்டான். பெருமானும் அருள் செய்தார். அதுமுதல் இந்தநதி தேவபூஷணம் எனப் பெறுவதாயிற்று'' என்று கூறினார்.

இதனைக்கேட்ட இராவணன் ஆனந்த பரவசனாகிச் சத்திய நதியுடன் கூடிய வேதநதியில் நீராடிக்கரை ஏறியவுடன் பஞ்சமூர்த்திகளும் காட்சி வழங்குவதைக்கண்டான். வணங்கினான். வேண்டிய வரங்களைப்பெற்று இலங்கையையடைந்தான்.

முன்னொரு காலத்திலே மேனகை என்பாள் தேவேந்திரனுடைய ஆணையின்வண்ணம் விசுவாமித்திரனுடைய தவத்தைக் குலைத்தாள். மனந்தெளிந்த விசுவாமித்திரன் நீ காட்டுமானாகி வேடன் கையம்பால் இறந்து அழிக எனச் சாபங் கொடுத்தான். அதனைக் கேட்டு அஞ்சிய மேனகை முனிவர் பெருமானே! நான் எனக்காகத் தங்கள் தவத்தைக் குலைக்கவில்லை. இந்திரன் ஏவலால் செய்தேன். அதனால் என்னை மன்னிக்கவேண்டும் என்று மன்றாடினாள். விசுவாமித்திரன் கோபந்தணிந்து மேனகையே! எப்படி யிருந்தாலும் சாபம் பலியாது இராது. மானாகி வேடன்கையம்பால் அழியவேண்டியவளே நீ. ஆனால் வேடன் கையம்பால் அடிபட்டு ஓடிச்சென்று வேதநதியில் வீழ்வாய். உடனே உன் மானுரு மறையும். பழைய மேனகையாகி மறுபடியும் இந்திர சபையிலே நடன கணிகையாவாய் என்று சாபக்கழிவு அருளினார். அவளும் அவ்வாறே பிறந்து வேடனால் அடிபட்டு வேதநதியில் வீழ்ந்து இறந்து மேனகையாகி விண்ணவர் நாட்டையடைந்தாள். இத்தன்மையானஇத்தீர்த்தக்கரையிலே பொன் முதலியவற்றைத் தானஞ் செய்தவர்களும், பிதா மாதாக்களுக்குச் சிரார்த்த முதலியன செய்தவர்களும், மறுமையில் தேவர்களாவர். பின் ஞானிகளாகி வீடுபேறடைவர்.

அங்ஙனமே திலோத்தமை என்பவளும் மானாகித் திரியும்போது வேதாமிர்தத்தில் நீரருந்தி மான் வடிவு நீங்கித் தேவமாதானாள்.

சூசுமாரன் என்னும் அரசன் பல தலங்களையும் வழிபட்டு இத் தலத்திற்கு வந்தான். வேதநதியில் நீராடினன். கணபதி, முருகன் முதலான ஐந்துமூர்த்திகளையும் கண்டான். வியந்துநின்று, திருமாலு பிரமனும் தேடியறியமுடியாத பெருமான் இவ்வண்ணம் எளிமையிற் காட்சி வழங்குகின்ருரே. இது இந்த் நதியின் பெருமை எனப்பாராட்டி நின்ருன். அப்போது புலத்தியமுனிவர் அங்கு வந்தார். அவரை நோக்கித் தான்கண்ட அதிசயத்தைக்கூறி, முனிவர் பெருமானே! இதன் காரணத்தை விளக்குதல் வேண்டும் என வேண்டிக்கொண்டான்.

முனிவர், முன்ஞெரு காலத்திலே ஓரந்தணன் பஞ்சமாபாதகங்களையும் செய்து முனிவர்கள் சாபத்தால் பிரமராட்சஞகித் திரிந்துகொண் டிருந்தான். கன்னிகைகளையும், அந்தணர்களையும், நல்லவர்களையும் பிடித்து ஆட்டிவந்தான். ஒருநாள் ஒரு தவச்சிரேஷ்டராகிய முனிவரைக் கண்டான். அவருடைய தவஒழுக்கமும், திருமேனிப்பொலிவும் அவனைக்கவர்ந்தன. நல்லகுணம் வெளிப்பட்டது. அதனல் கொல்ல என்று அவரை அணுகிய பிரமராக்கதன், அவரை வணங்கி எழுந்து நின்று, முனிவர் பெருமானே! தங்களைக்கண்டவுடன் என்மனம் மாறிவிட்டது. நான் இதுவரை செய்த பாவகன்மங்களை எண்ணி எண்ணித்துன்புறுகிறேன். இனியாவது இந்தப்பேய்வடிவம் நீங்கிப் புண்ணியகன்மங்களையே செய்யவேண்டும். அதற்கு உரிய வழிவகைகளை உபதேசியுங்கள் என வேண்டிக் கொண்டான்.

முனிவர், பிரமராக்கதனே! புண்ணியம் என்பது பிற உயிர்களைக் கொல்லாமையும், பிறர்மனம் நோக நடக்காமையும், தன் மனத்துள் காமம், குரோதம், மோகம், மதம், மார்ச்சரியம் முதலான குற்றங்கள் தோன்ருமையுமே. ஒருவன் புண்ணியம் எல்லாவற்றையும் செய்ய இயலாது.

மோனம் என்பது வாய்மூடிப் பேசாமலிருப்ப தல்ல, உண்மையைக் கூறுதலே மோனம். நாணம் என்பது பயனில்லாத சொற்களைப் பேசாமை. பொறுமையாயிருத்தலே நியமம். வேதாகமங்களில் சொல்லியவண்ணம் நடப்பதே நியமம். நியமங்களை நியதியாகத் தவருமல் செய்வதே விரதம். பரோபகாரமே சிவபூசை. எவரையும் புறம் பேசாம லிருத்தலே தோத்திரம். கொல்லாமையே தவம். தன் மனைவியை யன்றிப் பிறபெண்களை விரும்பாமையே துறவு. நல்லதைத் தீது என்றும், தீயதை நல்லதுஎன்றும் மயங்காததே புலனடக்கம்; பெரியோர்களை அடைதலே ஆசனம்; மனமாசகற்றுதலே சமாதி; உலகத்தை மாயாகாரியம் என்று உணர்தலே யோகம்; உயிர்கட்கும், கடவுளுக்கும் உள்ளத் தொடர்புகளை அறிதலேஞானம்; அறநூல்களுக்கு மாறிநடப்பதேபாவம்; பாவம், கோபதாபம், மோகம் இவற்ருல் விளைவது. கோபதாபங்கள் இன்றி நூல்களில் சொல்லியவண்ணம் நடப்பதே புண்ணியம். புண்ணியத்தில் சிவபுண்ணியமே சிறந்தது. அதனுல் சிவஞானம் சித்திக்கும். அதனுல் வீடு, பேறு உண்டாம் என்று உபதேசித்தார்.

பிரமராக்ஷதன் முனிவர் பெருமானே! உண்மை விளங்கிற்று. சிவபுண்யம் செய்யக்கூடிய தலம் எது? எப்படிச்செய்தல் வேண்டும், விளக்கியருள வேண்டும் என வேண்டிக்கொண்டான்.

முனிவர், அரக்கனே! வேதாரண்யத்திலே வேத நதியிலே நீராடி, அங்கே காட்சி தரும் பெருமானையும் வணங்கினுல், நீ பிறவி நீங்கி முத்தியடையலாம்என்று அவன் மனத்திலே நீங்காத அன்பு உண்டாகும்வண்ணம் கோலாகலன் முதலிய சில வரலாறுகளையும் சொன்னுர்.

பிரமராக்கதன் முனிவர் வார்த்தையைக் கேட்டு மகிழ்ந்து விடைபெற்று வேதாரணியம் சென்று வேத நதியில் மூழ்கி தன் வடிவத்தைப்பெற்று சந்திரசேகர மூர்த்தியையும், உமாதேவியாரையும், கணபதி முதலியோரையும் வணங்கி மோட்சத்தை யடைந்தான்; என்று புலத்திய முனிவர் சூசுமார மன்னனுக்குச் சொல்ல, அவன் வேதநதியில்நீராடிஎழுந்தான், உடனே சிவபெருமான் கணபதி முதலான பஞ்ச மூர்த்திகளுடன் தரிசனம் தந்தார். மன்னன் மகிழ்ந்து பூசனை பலவும் செய்தான். அன்றுமுதல் அத்தீர்த்தம் சூசுமார பூசிதம் எனப்பெயர் உண்டாயிற்று, நீராடினவர்களுக்கு அறிவுண்டாக்குவதால் வாணி தீர்த்தம் எனவும் வழங்கப்பெறும். இத்தீர்த்தத்திற்கு ஈடானதீர்த்தம் எதுவும் எந்த வுலகத்திலும் இல்லை யென்று கூறினர்.

கோடிதீர்த்தம்.

கடலின் தென்கிழ்க் கோடியாக இருப்பதாலும். ஆதிராமபிரானுடைய வில்லின்கோடி தோயப்பெற்றதாலும், நீராடிய அன்பர்களின் பாவங்கள் கோடி கோடியாக இருந்தாலும் அவற்றைப்போக்கிக்கோடிக் கணக்கான நன்மைகளை அவர்கட்கு அளிப்பதாலும், கோடித் தீர்த்தம் எனப் பெறுவது. இத்திர்த்தத்தில் யார் எக்காலத்தில் மூழ்கினலும் முத்தியடைவார்கள். ஆனலும், வியதிபாதயோகம் தக்ஷிணயன உத்திராயண புண்யகாலங்கள், மாதப்பிறப்பு, அமாவாசை, பௌர்ணிமை. விஷு புண்ய காலங்கள் இவைகளில் நீராடுவது மிகச்சிறந்தது பஞ்சமா பாதகர்களாயினும் இக்கடலில் ஆடப் பாவங்கள் நீங்கிச்சிறப்பான முத்தியடைவார்கள்.

கங்கையில் பத்தாண்டு ஆடின புண்ணியம் கோடியில் ஒருநாள் ஆடினல் கிடைக்கும் என்றல் இதன் சிறப்பு எம்மால் கூற இயலுவதாகுமோ! தெய்வங்

களுக்குள் சிவபெருமானைப்போலத் தீர்த்தங்களிற் சிறந்தது கோடி தீர்த்தம். இதில் மூழ்கினவனுடைய மேனியிலிருந்து ஒன்று இரண்டு திவலைகள் மற்றவர் கள்மேற்பட்டாலும் வீடுபேறு உண்டாம்.

முன்னொரு காலத்திலே தமிழ் நாட்டிலே ஏமாங் கதன் என்று ஒரு வணிகன் வாழ்ந்தான். அவன் பெருஞ்செல்வன். வாணிகத்தால் கோடிக்கணக்கான பொன்களைக்குவித்தவன். ஆனாலும் ஓரரைக்காசுகூட தான தருமங்களுக்காகச் செலவிட மாட்டான். அவ னுண்டு; அவன் மனைவியுண்டு; இருவருமாகச் சுக போகங்களை நுகர்ந்துவந்தான். எத்தனை நாளைக்கு இளமையிருக்கும்? முதுமை வந்தது. எழவும் நடக்க வும் கூடாத நிலை வந்தது; தன்னைப்போல இருந்த பலர்இறக்கவும் கண்டான். தமக்கும் இப்படித்தானே என்று எண்ணினான். அப்போதுதான் நாம் மறுமைக் காக என்ன புண்ணியம் செய்திருக்கிறோம்? ஒன்றும் இல்லையே! என்று எண்ணி வருந்தினான். வருந்தி என்ன பயன்? இனியாவது மேலைக்கு ஆவன செய் வோம் என்று எண்ணினான். தம்முடைய பொருளை இரண்டாகப்பிரித்து ஒருபாதியைப் பிள்ளைகளுக்காக வைத்துவிட்டு, ஒருபாதியை எடுத்துக்கொண்டு திரு வாரூரை வந்தடைந்தான். அங்குப் பல தருமசாலை கள், நந்தவனங்கள், தண்ணீர்ப்பந்தல்கள் முதலாயின அமைத்தான். சிவாலய திருப்பணிகள் பல செய் தான், சில்காலம் திருவாரூரிலேயே வாழ்ந்திருந்தான். வணிகனும் மனைவியுமாக ஒரே நாளில் இறந்தனர்.

பின்னர், வணிகன் மக்களாகிய சுதேவன், வசு தேவன் இருவரும் கள், காமம், கொலை முதலியன செய்து பொருளை ஒழித்துவிட்டனர். பசியால் பல நாள் வாடித் திருடியும், கொள்ளையடித்தும் வயிறு வளர்த்து வந்தனர். அரசன் இவர்கள் கொடுமையை யறிந்து தண்டிக்க முற்பட்டான். இவர்கள் அஞ்சி,

காட்டிலே மறைந்து விலங்குகளைக் கொன்று தின்று வாழ்ந்து வந்தனர். ஒருநாள் மூத்தவனைப் பன்றிக் கூட்டங்கள் தாக்கின. இளையவனைக் கருநாகம் தீண்டியது. இருவரும் ஒரேநாளில் இறந்தனர். யமதூதர்கள் இவர்களைத் தருமராசன் முன்பு கொண்டுபோனார்கள். தருமராசன் இவர்களில் இளையவனை சொர்க்கத்துக்கு அனுப்பும்படியும், மூத்தவனை நரகத்தில் தள்ளும்படியும் உத்திரவு அளித்தான். தம்பி திகைத்து நின்று தர்மராசரே! இருவரும் ஒருதாய் வயிற்றிற் பிறந்தோம். எங்களுடைய வாழ்வு தாழ்வு இரண்டும் ஒன்றாகவே இருந்தன. மரணமும் அப்படியே வந்தது. அப்படியிருக்க எனக்குமட்டும் சொர்க்கம்ஏன்? என்றான்.

தருமராசன் அவனைப்பார்த்து நீ "கோடி தீர்த்தத்தில் நீராடிய ஒருவருடைய ஆடை நீர்த்துளி" ஒன்று மேல்பட்டது. அதனால் உன் பாவங்கள் தொலைந்தன். நீ சொர்க்கம் செல்லத்தகுதி பெற்றாய் என்றான்.

சிறியவன், அப்படியானால் என் அண்ணன் கடைத்தேற வழி யில்லையா என்றான்.

தர்மராசன், இருக்கிறதே! நீ கோடி தீர்த்தத்திலே பட்டதால் உனக்கு உண்டான புண்யத்தில் பதினறில் ஒரு பங்கை அதாவது வீசம் பகுதியை இவனுக்குத்தானம் செய்தால் இவனும் உன்னுடன் வருவான் என்றான், இளையவன் அவ்வாறேசெய்து அண்ணனையும் சுவர்க்கம் அடையச் செய்தான். கோடி தீர்த்த திவலையின் பெருமை இவ்வளவானால் மூழ்கினோர் அடையும் பயனும், அங்கு தானதருமங்கள் செய்தோர் அடையும் பயனும் அளவிட்டுக் கூற இயலுமோ.?

மணவாளச் சுருக்கம்.

முன்னொரு காலத்திலே விந்திய மலைக்கும் மேரு மலைக்கும் யார் பெரியவன் என்ற விஷயமாகக்கலகம் மூண்டது. மலைகள் மோதிக்கொண்டால் என்னகதி நேருமென்பதை நினைக்கவும் கூடுமோ! அப்போது நாரத முனிவர் அவ்வழியாக வந்தார். விந்திய மலை அவரைப்பார்த்து, முனிவர் பெருமானே தாங்கள் எல்லாவுலகங்களிலும் சுற்றி வருபவராயிற்றே, தாங்கள் அறிந்தவரையில் எங்கள் இருவருக்குள்ளே உயர்ந்தவர்கள் யார்? உண்மையை உணர்த்தியருள வேண்டும் என்று வேண்டிக்கொண்டது. நாரதர் விந்தியமலையைப் பார்த்துக் கைப்புண்ணுக்குக் கண்ணாடி வேண்டுமா? கதிரவன் ஒளியிற்பெரியவன் என்பதற்கு சாட்சியும் வேண்டுமா? மேரு மலைதான் சிறந்தது என்பதை உலகம் அறியுமே என்றார்.

அவ்வளவுதான்! விந்தியமலைக்குக் கோபம் வந்தது. ஆகாயம்—பாதாளம் எட்டுத்திசைகள் எங்கும் பறந்து உயர்ந்தது. அதனால் சூரிய-சந்திரர்கள் கூட இயங்கமுடியாத இன்னல் விளைந்தது. சூரியசந்திரர்களின் இயக்கமில்லாமையால் அந்தணர்கள் தத்தம் கடமைகளில் இருந்து தவறினார்கள். தேவர்கட்கு யாகம் முதலிய செயல்கள் இன்மையால் பசி வாட்டியது, மக்கள் தொழிலொன்றுமின்றி இருளில் மூழ்கித் தவித்தனர். இதனையறிந்த தேவர்கள் பிரமா,விஷ்ணு, இந்திரன் முதலியவர்களிடம் முறையிட்டனர், அவர்கள் எல்லாத் தேவர்களையும் உடனழைத்துக் கொண்டு கைலை மலையைச்சார்ந்து சமயமறிந்து சந்நிதானத்தையடைந்து செய்தியைத்தெரிவித்துக்கொண்டனர். சிவபெருமான் நம் விவாக காலத்தில் அகஸ்தியரை அனுப்பி அம்மலையை யடக்குவோம் என்று ஆணைதந்தனர். தேவர்கள் அந்தக்காலத்தை எதிர்பார்த்திருந்தனர். திருமண வைபவமும் வந்தது.

எல்லாவுலகத்திலும் உள்ள எல்லாத் தேவர்களும் வடதிசையிலே வந்து கூடினுர்கள். அதனுல் வடபால் தாழ்ந்தது. தென்பால் உயர்ந்தது. உலகமேகவிழ்ந்து விடுமோ என்ற ஐயம் எல்லோருக்கும் உண்டாயிற்று. அப்போது சிவபெருமான் திருநந்திதேவரையழைத்து முனிவர் கணத்தில் அகத்தியரை அழைப்பாயாக என்று ஆணை வழங்கினுர். அகத்தியரும் வந்தார். வணங்கினுர். சிவபெருமான் அவரை நோக்கி, அன்புடைச்செல்வ! நீ தென்பால் சென்று பூமியைச்சமப்படுத்துக என்றனர். அகத்தியர் தேவரீர் திருமணத்தைத்தரிசனத்தைப்பெறும் புண்ணியம் செய்தேனில்லையோ! என்று வருந்தினர். சிவபெருமான் அவருள்ளக்குறிப்பை அறிந்து, முனிவ! நம் கருணை உன் மீது மிகுதியும் உள்ளது. அதனுல் ஏவுகின்ருேம். நினைத்துப்பார். பூமியில் பலருக்கு உபகாரப்படுதலைக்காட்டிலும் சிறந்த புண்ணியம் உண்டோ! அதனுல் நீயே புண்ணியசாலி, நம்முடைய திருக்கல்யாண தரிசனத்தைக்காண விரும்புவாய். ஆனுல் நாமே வேதங்கள் வழிபடும் வேதவனத்திற்கு வந்து தரிசனம் தருவோம். நீ வேதவனத்தில் கோடிக் கரையில் வடக்கே ஓரிடத்தில் ஸ்ரீ பஞ்சாட்சர செபஞ்செய்து கொண்டிருப்பாயாக என்று சொல்லி அனுப்பினுர்.

அகத்தியர் திருவருள் ஆணைக்கு அஞ்சி அவ்வாறே தென்திசை செல்லப் புறப்பட்டார். வழியில் விந்தியமலை தடுத்துநின்றது. அகத்தியர் 'எல்லார்க்கும் நன்ரும் பணிதல்' ஆதலால் நீயடங்கியிருப்பதே உனக்குப் பெருமை என்று பலவாருக உபதேசம் செய்தார். விந்தியமலை இவருடைய உபதேசம் ஒன்றையும் கேட்காமல் செருக்குற்று நின்றது. அகத்தியர் தவவலிமையால் 'மகிமா' என்ற வடிவங்கொண்டு அதன் தலையிலே ஒரு கையை வைத்து அமுத்தினுர். மலை பாதாளத்திலே அமுந்தியது. முனிவர் மலையைக்கடந்து தெற்கே வந்தார். வழியில்

வில்வலன் வாதாவி என்ற அரக்கர்களையும் கொன்று தென்றிசையைச் சார்ந்தார், உடனே பூமி சமமாயிற்று. முனிவர் வேதாரண்யத்தையடைந்தார். வேத நதி முதலான தீர்த்தங்களில் நீராடி, விதிப்படி வேதவனேசரைப் பூசித்து, வேதாரணியத்திற்கு ஒரு குரோச தூரத்திலே ஓர் ஆச்சிரமம் அமைத்துக் கொண்டு, பக்கத்திலே மணலால் சிவலிங்கம் ஒன்று தாபித்து வழிபட்டு வந்தார். வேதவனேசரையும் வணங்கினர். திருக் கல்யாண தரிசனத்திற்காகத் தவஞ் செய்து கொண்டிருந்தார். அதுமுதல் அத்தலத்திற்கு அகத்தியன் பள்ளி என வழங்கலாயிற்று.

சித்திரை மாதத்திலே பூர்வ பட்சத்திலே சப்தமி திதியிலே ஞாயிற்றுக் கிழமை உச்சிக் காலத்திலே கைலையில் நடந்த திருமணக் கோலத்தைக்காட்டினர். அகத்திய முனிவர் தரிசித்து ஆனந்தக்கடலில் ஆழ்ந்தார். கீழே விழுந்து வணங்கிப் பரவசமானர். சிவ பெருமான்தனது திருக்கரத்தினலே எடுத்து அணைத்து தாயன்போடு முதுகில் தடவிக்கொடுத்து, 'அன்பனே உனக்கு வேண்டிய வரம் எதுவாயினுங் கேள்' தருவோம் என்ருர்.

முனிவர், வேண்டத்தக்கதறியும் பெருமானே! வேண்ட முழுதும் தரும் வள்ளலே! இவ்வுலகத்திலே உள்ள மக்கள் யாவரும் வாழும் பொருட்டு, மணவாளக் கோலத்துடன் இங்கே எப்போதும் எழுந்தருளியிருத்தல் வேண்டும். இதுபோல இந்த நாளிலே விதிப்படி தீர்த்தங்களில் நீராடி வழிபட்டவர்களுக்கும், மாசிமகத்திலே திருமணக்கோலத்தை வழிப்பட்டவர்களுக்கும் இம்மை, மறுமையின்பங்களை எப்போதும் அளித்தருள வேண்டும் என்று வேண்டினர். அது முதல் சிவலிங்கத்தின்மேல்பால் சிவபெருமான் மணவாளப் பெருமாளுக எழுந்தருளியிருக்கின்ருர். அதனல் இத்தலம் தட்சிண கைலாயம் என வழங்கலாயிற்று.

புவனிவிடங்கர் வரலாறு

முன்னொரு காலத்திலே தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் பெரும்போர் மூண்டது. தேவர்கள் தோற்றனர். யாது செய்வோம் என வருந்தினர். அனைவரும் திருமாலிடம்சென்று விண்ணப்பித்தனர். அவர், தேவர்களே! நீங்கள் அசுரர்களை வெல்லவேண்டுமானல் பூமியிலே சூரிய குலத்திலே முசுகுந்தன் என்றொரு அரசனிருக்கிறன். அவனை உதவிக்கு அழைத்து வந்து போரிட்டால் வெல்லலாம் என்றனர்.

தேவர்கள் அவ்வாறே முசுகுந்தனை யடைந்தனர். அவனும் அவ்வாறே வென்றுதருவேன் என அபயம் அளித்தான். முசுகுந்தன் தன் மகனிடத்தில் அரசியலை ஒப்புவித்து தெய்வலோகம் சென்று, தேவப்படைகளோடு அசுரர்மேற் படை எடுத்துச் சென்று வென்றான். தேவர்கள் மலர்மழை பொழிந்து அரசனைப்பாராட்டினர்கள். இந்திரன் தன் அரியணைமீதே உடனிருத்தி உபசரித்தான், தேவலோகச் சிறப்புக்கள் ஒவ்வொன்றையும் காட்டினன். அப்போது கற்பகவனத்திலேயுள்ள ஓராலயத்திலே அம்மையப்பராக நிறை செல்வத் தியாகமூர்த்தி விளங்குவதைக் கண்டு ஆனந்தப்பரவசனாகி, தேவர் தலைவா! எனக்கு இந்தப்பெருமானைத் தந்தருள் எனக் கேட்டான். இந்திரன் அதனைக் கொடுக்கவும் மனமின்றி, அதனைத் தடுக்கவும் மனமின்றி இரகசியமாகவிசுவகன்மனுக்கு இதுபோல் ஆறு உருவங்கள் அமைக்கும் வண்ணம் ஆணைதந்து பிற இடங்களைப் பார்த்துவர அரசனை யழைத்துச் சென்றான். விசுவகன்மன் சொன்னபடி செய்துவைத்திருந்தான். அவைகளை ஒவ்வொன்ருக அரசனுக்குக்காட்டினன். அரசன் மனம் விதிவிடங்கரைத்தவிற வேருென்றிலும் பதியாமைக் கண்டு, அரசே நீ எமக்குச் செய்த உதவி மிகப்பெரிது. நீ இந்த ஏழு மூர்த்திகளையும் எடுத்துச் சென்று உரிய

இடங்களில் தாபித்து பூசித்து வருக யென அனுப்பி வைத்தான். முசுகுந்தன் அவ்வாறே எடுத்து திருவரு ளானையின் வண்ணம் வீதிவிடங்கரைத் திருவாரூரி லும், புவனிவிடங்கரைத் திருமறைக்காடாகிய வேதா ரணியத்திலும் பிரதிட்டை செய்து வழிபாடுகள் செய் வித்தான். மற்ற மூர்த்திகளை நாகை, காரு யில், நள் ளாறு, கோளிலி முதலியத் தலங்களில் பிரதிட்டை செய்வித்தான். புவனிவிடங்கரிடத்தில் அதிகப் பற்று டையவனாக அடிக்கடி இந்திரனோடு வந்து முசுகுந்தன் வழிபட்டுச்செல்வார். பரமசிவனும் அரசன் வேண்டு கோட்கிரங்கி அனைவருக்கும் அருள் வழங்கி என்றும் சாநித்யராக வீற்றிருப்பார். ஆதலால், இத் தலத் திலே புவனிவிடங்க மூர்த்தியைத் தெரிசித்தவர்கள் நற்கதியும் சிவப்பேறும் பொன்னும், பொருளும் பெறுவார்கள்.

வீரகத்தி விமோசனமானது.

தசரத ராமன் இராவணனைக் கொன்று சீதையை மீட்டு அயோத்திக்குச் செல்கின்றபோது இராவணன் விசிரவசு என்னும் ரிஷியின் புதல்வனாகையால் அவ னைக்கொன்ற பாபம் பிரமகத்தியாகப் பின் தொடர்ந் தது. இராமன் அப்பழியைப் போக்கிக்கொள்ள சேதுவில் சிவலிங்கப்பிரதிட்டைசெய்து வழிபட்டான். அதனால் பிரமகத்தி நீங்கியது. ஆயினும், வீரனைக் கொன்ற பாபமானது வீரகத்தியாய் பெண்ணுருவ முடன் இராமனைத் தொடர்ந்து வந்தது, இராமன் அஞ்சி அதனையும் மற்றொரு சிவலிங்கப் பிரதிட்டை செய்து போக்கிக்கொள்ளலாமா என்று எண்ணினார், அப்போது வேதாரணியம் சென்று சிவ பிரதிட்டை செய்தால் வீரகத்தி நீங்கும். இல்லையானால் நீங்காது என்று ஆகாயவாணி கூறியது. அதனைக்கேட்ட இரா மன் வேதாரணியம் செல்ல எழுந்தான். அப்போது ஆகாயவாணியாக ஒலித்தபூதநாயகன் இராமா இனிக் கணமும் தாமதியாதே! பரதன் தீக்குண்டத்தில் விழ

இருக்கிறன்; விரைந்து சென்று அரசியலை ஏற்றுக்கொள். இல்லையாளுல் அவனைக் கொன்ற பாபமும் வந்து சேரும் என்றது. உடனே இராமன் அயோத்தி சென்று அரசியலைஏற்று நடத்திவந்தான். ஒருநாள் இரவு கரிய-நெடிய-பயங்கர உருவத்தைக் கண்டு நடுங்கிச் சீ பஞ்சாட்சர செபம்செய்து அச்சம் நீங்கி உறங்கினன். பொழுது புலர்ந்ததும் நீராடி அரச பேரவையை யடைந்து குலகுருவாகிய வசிட்ட ரிடத்தில் இக்கனவையும் கூறி, முன் அசரீரியாகப் பெருமான் அருளிய ஆணைகளையும் தெரிவித்து; நான் வேதாரண்யம் போய்ச் சிவலிங்கப்பிரதிட்டை செய்து வழிபடப்போகிறேன் என்றான்.

வசிட்டர் இராமனைப்பார்த்து, ஏ இராமா! சிவ லிங்க வழிபாட்டுக்கு ஒத்த தவம் ஒன்றும் உலகில் இல்லை. அதிலும் திருமறைக்காடு போன்ற சிறந்த தலம் ஒன்றும் இல்லை. இறுமை இன்பத்தையும் எளிதில் கொடுக்கும் தலம் அதுவொன்றே. அங்கே சென்று வழிபடு என்றார்.

அரசனும் சீதை, இலக்குமணன் இவர்களுடன் புறப்பட முயன்றான். அப்போது வீரகத்தி வடவைத் தீயைப்போலச் சினந்து அலறி ஆரவாரஞ் செய்து தடுத்தது. இராமன் சீ பஞ்சாக்கர செபம் செய்து கொண்டே நடக்கப் பேய் அலறிக்கொண்டே பின் தொடர்ந்துவந்தது. வேதாரணியத்தையும் அடைந்து அரசனைச் சிவலிங்க வழிபாடு செய்யவொட்டாது தடுத்து அலறியது. சிவபெருமான் திருவருளின் வண்ணம் விநாயகப்பெருமான் எழுந்து வீரகத்திப் பேயை உதைக்கத் திருவுளங்கொண்டு ஒரு காலை உந்தித்தூக்கினர், உடனே பேய் அடங்கி நின்றது. அந்த விநாயகர் வீரகத்திச்சேத விநாயகர் என்னும் பெயருடன் இன்றும் விளங்குகிறார். இராமன் அவ ருக்குச் சிறப்பு வழிபாடுகள் இயற்றினர். இனி ஒரு

போதும் வீரகத்தி தன்னைத் தொடராதவாறு அருள் வழங்கவேண்டும் என்று வேண்டினர். விநாயகரும் அவ்வாறே அருளினர்.

இராமன் மணிகர்ணிகை முதலானதீர்த்தங்களில் நீராடி விதிப்படி வழிபாடு செய்து. வசிட்டரைக் கொண்டு வேதாரணியேசருக்குத் தென்பக்கத்திலே இராமநாதர் என்னும் பெயரோடு சிவலிங்கப் பிரதிட்டை செய்து வழிபட்டு வந்தார். இராமச்சந்திரபுரம் என்னும் கிராமத்தையும் பூசைச் செலவிற்காக வழங்கினர்.

பிரம்மச்சாரி வரலாறு.

வேதாரணியத்திற்கு அண்மையிலுள்ள இராமச்சந்திரபுரத்திலே ஒரு பிராமணன் வாழ்ந்துவந்தான். தன்மகன் பிறந்த ஜாதகத்தைப் பார்த்தான். மகன் பதினாருவது வயதில் தாயைப்புணர்தல், பசுக்கொலை, கள்குடித்தல் முதலிய பாவங்களைச் செய்வான் என்றிருந்தது. இதே கவலையாக இருந்து பிராமணன் இறந்தான். மகன் கண்ணில் தந்தை எழுதி வைத்திருந்த சாதகக்குறிப்பு அகப்பட்டது. அதனைப்படித்துப் பார்த்த மகன் அஞ்சியழுதுத்தேறி, இவ்வளவு பாவங்களையும் நான் இங்கிருந்தாலல்லவா செய்யக்கூடும். எங்காவது தேசாந்தரம் போய்விடுவோம் எனப் புறப்பட்டுக்கங்கைவரை சென்று பல ஆண்டுகளைக் கழித்தான். தனக்குப்பதினாறுவயது கழிந்திருக்கும் என்று எண்ணிக்கொண்டு ஊருக்குத் திரும்பினன். இரவு நேரம். வழக்கம்போல ஊரில் பிச்சைஎடுத்து அதனை உண்பதற்காக ஒரு வீட்டுத்திண்ணையை யடைந்தான். அங்கே ஓரிளம் விதவை வேலைக்காரியாக இருந்தாள். இவனைக்கண்டதும் இவன் இளமையிலும் அழகிலும் மயங்கி அவன் விருப்பப்படி இடமும் பிறவும் அளித்து உபசரித்தாள். எப்படியாவது இவனைக்கூடவேண்டும் என்று துடித்தாள். அவன் குடிப்பதற்காக நீர் கேட்

டான். அவளோ, இவன் தன்வலையில் சிக்கமாட்டான் என்பதையறிந்து மதுவையே நீரென்று கொடுத்தாள். அவனும் மதுவை இதுவரையறியாத வனாகையாலே உண்டான். மதிமயங்கினான். பக்கத்திருந்த பசுவைக் கொன்றான். காமந் தலைக்கேறி அவ்விதவையைப் புணர்ந்தான். பொழுதும் விடிந்தது. மது மயக்கமும் தெளிந்தது. தான் செய்த தவறுகளை நினைந்துவருந்தி. அவ்விதவையைப் பார்த்துநீ யார் உன்வரலாறுஎன்ன என்று கேட்டான். அவள் நடந்ததைச் சொன்னாள். அவன் விதிவலி கொடிது, வெல்லுதற்கரியது என வருந்தினான். இப்பழி தொலையும் வழி யாது என அலைந்தான். ஒன்றும் புலப்படவில்லை. வாளினால் கழுத்தை யறிந்துகொண்டாவது இறப்போம் எனத் துணிந்து வாளால் கழுத்தை யறுத்துக் கொண்டான். அப்போது வேதாரண்யேசர் திருமுன்சென்று அவன் கையைப்பிடித்துத்தடுத்து ஏ! அந்தணா இதற்குத் தற் கொலையும் செய்துகொண்டு அப்பாவத்தையும்சுமக்க எண்ணுகிறாயா? திருமறைக்காட்டில் மணிகர்ணிகை யில் மூழ்கி வேதவனேசரை வழிப்பட்டால் எல்லாப் பாவங்களும் நீங்கும். அப்படியே செய் என்றருளினார்.

பிரம்மசாரியும் அப்படியே மூழ்கி உய்ந்தான் அவன் தாய் வழிபட்டுச் சத்தி பதம் பெற்றாள்.

கோலாகலன் வரலாறு.

சாகல்யபுரத்திலே வேளாள மரபிலே பிறந்து அழகிலும் ஆஸ்தியிலும்வயதிலும் வாழ்விலும்சிறந்த கோலாகலன் என்பவன் ஒருவன் வாழ்ந்து வந்தான். அவன் காமத்தின் வசப்பட்டு உயர்ந்தார்-இழிந்தார், உற்றார்—மற்றார் என்ற வேறுபாடில்லாமல் எல்லா மாதரையும் கூடிக்குடித்துக் களித்து எல்லாப்பொருள் களையும் இழந்து திருடவும் தொடங்கினான். திருட் டினைக்காக்க மற்ற பஞ்சமா பாதகங்களையும் செய்து வந்தான். அரசன் அறிந்து இவனைச் சிரச்சேதம்

செய்துவிடும்படிக் காவலர்களுக்குக்கட்டளையிட்டான். ஊரிலுள்ள பெருமக்களும், அமைச்சர்முதலானோரும் 'போகிருன் பெரிய குடும்பத்தில் பிறந்த பிள்ளை எச்சரிக்கை செய்து விட்டுவிடுங்கள் வேந்தே' என வேண்டிக்கொண்டனர். அரசனும் அவ்வாறே செய்தான்.

கோலாகலன் திருந்தி நடந்தான். ஆனாலும் காம இச்சை விட்டபாடில்லை. அதனால் தன் தாயையே புணர எண்ணினான். தாயோ உத்தமி; அப்பா! நீ நான் பெற்ற பிள்ளை. நீ என்னைப் பெண்டாள நினைப்பது பெருந்தவறு; இதனால் விளையும் பாவம் எதனாலும் தீராது என்று சொன்னாள். அவன் கேட்காமல் அவளைக் கெடுக்க முயன்றான். தகப்பன் இடையூறாக இருப்பதால் அவனை அடித்துக் கொன்றுவிட்டான். தாயைப்புணர்ந்துவந்தான். ஊரவர்கள் இந்தப்பாவி இந்த ஊரில் இருக்கவே கூடாது என்று துரத்தினார்கள். கோலாகலன் தன் தாயையும் இழுத்துக்கொண்டு காடுகளில் திரிந்து வந்தான். காடு காடாகத் திரிகின்றவன் இந்த வேதாரண்யத்தையும் அடைந்தான். ஒருநாள் வேட்டைக்காகக் காட்டைக் கலைத்தபோது ஒரு புலி கோலாகலனையும் தாயையும் அவனுடைய இரண்டு மக்களையும் கொன்றது. வேதாரண்யத்தில் இறந்தமையால் அவர்கள் நால்வரும் சிவபெருமான் அருள் பெற்றுத் திருக் கைலையையடைந்தனர்.

இத்தலத்தில் வசிப்பவர்கள் பாவங்களையே செய்ய மாட்டார்கள். அப்படி செய்வார்களானாலும் அவர்களுக்கு யமபயம் யமவாதனை இல்லை. சிவகதி கூடும்.

மகாபலி வரலாறு.

வேதவனேசர் கோயிலிலே இறைவன்எழுந்தருளியிருக்கும் கருப்பக் கிருகத்திலே எரிகின்ற விளக்கு

ஒருநாள் மங்கிற்று. சிவபெருமான் உமாதேவியாரை நோக்கி இந்த விளக்கைத் தூண்டுகிறவர்கள் யாரா யிருந்தாலும் அவர்களுக்கு இம்மையில் அரச பதவி யையும், மறுமையில் சிவ கதியையும் தருவோம்' என்றார். உமாதேவியார் புன்னகைபூத்து, அர்த்த யாமம் முடிந்து கதவும் திருக்காப்பிட்டபிறகு, தேவரீர் ஏகாந்தமாக இருக்கும்போது யார் உள்ளே வருவார் கள்; விளக்கைத் தூண்டுவார்கள். தாங்கள் சொல் லும் வரம் விந்தையாக இருக்கிறது! என்று விண் ணப்பித்தார். பெருமான்; சற்று இருந்து யார் என்றான், அப்போது ஓர்எலி விளக்கிலுள்ள நெய்யை யுண்ண விளக்கின்மேல் ஏறியது. அதன்வால்பட்டுத் தூண்டப்பட்டது. விளக்கு ஓங்கி ஒளியுடன் எரிந்தது, சிவபெருமான் அவ்வெலிக்கு எல்லாச் செல்வங்களு டனும் நிறைந்த அரசபதவியை எய்தும் வண்ணம் அருள் பாலித்தார். அவ்வெலி விரோசனன் என்னும் அரசனுக்கு மகனாகப்பிறந்து மகாபலி என்னும் பெய ருடன் மூவுலகையும் ஆண்டுவந்தது. 'செல்வம் வந் துற்றகாலை தெய்வமும் சிறிது பேணார்' 'கடுந்தனம் கண்ணை மறைக்கும்'. ஆகையால், மாபலி இவ்வளவு பெரிய பதவியும்—அரச வாழ்வும் வேதாரணியேசர் கருணையால் வந்தன என்பதை மறந்து முனிவர்கட் கும் தேவர்கட்கும் இடையூறு செய்து செருக்கிற்த ருக்கி தெய்வத்தை மறந்து வாழ்ந்துவந்தான்.

மகாபலியால் படுந் துன்பத்தைத் தாங்கமுடியா மல் தேவர்களும் முனிவர்களும்பிரமதேவனிடம்முறை யிட்டனர். பிரமதேவன் சிந்தித்து இது 'வேதவன நாதர் தந்த வரத்தின் வலிமையாகும்'. ஆதலால், அவர் திருமுன்பே சென்று வேண்டிக்கொள்வோம் என்று சென்று விண்ணப்பித்தனர், வேதவனப்பெரு மான் 'தாய் வளர்த்த மரம் நச்சுமரமாயினும் கொல் லார்' ஆகையாலே திருமாலையழைத்து. முகுந்தா நாம் கொடுத்த வரத்தை நாமே மாற்றக்கூடாது;வேறு

எவராலும் மாற்ற இயலாது; ஆக்வே அவனிடம் சென்று இரந்து பெறுதலே தகுதி; அவனையடக்க வேண்டுமேயன்றி அழிக்கக் கூடாது; ஆதலால் நீ அந்தணனாகச்சென்று மூன்றடி மண் யாசித்து விசுவ ரூபம் எடுத்து அடக்கி வருக' என்றனர். திருமால் அங்ஙனமே சென்று கேட்டு அவன் சிரமீது ஓரடி வைத்து அடக்கினர். 'பாதாளத்திலேயே இரு; பெரிய யாகங்களிலே அக்னி சொலிக்காமலிருக்கும் போது கொடுக்கப்பெறும் அவிகளையும் தீயோர்க்குக் கொடுக்கும் தானப்பயனையும், சிவாகம நெறிக்கு மாருக விதி தவறிச்செய்யப்படும் புண்ணியப்பயனை யும் ஏற்று இரு' என்பது உனக்குச் சிவபெருமா னிட்ட கட்டளை". என்று வரங்கொடுத்து அங்கே இருத்தினர்.

இவ்வண்ணம் விளக்கைத்தூண்டியஎலி அரசனாகி நித்தியவாழ்வைப்பெறுமானல் மக்கள் மனம் விரும்பி விளக்கு ஏற்றினல் அடையும் பயன் எவ்வளவுஎன்று சொல்லமுடியுமோ!.

"விளக்கிட்டாற் பேறு சொல்லின் மெய்ந்நெறி ஞானமாகும்" —அப்பர்

சவுதாசன் வரலாறு.

முன்னொரு காலத்திலே அயோத்தி நகரிலே சவு தாசன் என்னும் அரசன் ஆண்டுவந்தான், ஒருநாள் வேட்டைக்குச் சென்றான். அங்கே மலைக்குகை ஒன் றிலே இரண்டு மான்கள் புணர்ந்துகொண்டிருந்தன. அவற்றில் பெண்மானை அம்பால் எய்துவீழ்த்தினன். உடனே ஆண் மானாக இருந்த சங்கர்த்தசன் என்னும் அரக்கன் அரசன்முன்வந்து 'நாங்கள் உண்மையான மான்கள் அல்ல. காமவேட்கையாலே நானும் என் மனைவி வரரேகையும் மானுருவம் கொண்டு புணர்ந்து கொண்டிருந்தோம். எந்த விலங்கையும் புணர்ச்சிக்

காலத்தில் கொல்லுதல் ஆகாது என்பதை அறிந்தும் நீ கொன்ருய். ஆதலால் உன்னை இப்பாவம் சாராமல் விடாது; நானும் பழிவாங்காமல் விடமாட்டேன்' என்று சொல்லி மறைந்தான்.

அரசன் அயோத்திக்குச்சென்று தன் குலகுருவாகிய வசிட்டரிடம் கூறினன். வசிட்டர் 'அரக்கர்களோ மிகக்கொடியவர்கள் எப்படியும் வஞ்சனை செய்வார்கள்; எச்சரிக்கையாயிரு என்று கூறிச்சென்ருர்.

சில நாட்கள் கழிந்தன; அரசன் வசிட்டர் ஆணையின்வண்ணம் ஒரு பெரிய யாகம் செய்தான். யாக முடிவில் வசிட்டர் கங்கையில் நீராடி மாத்தியானிகமாகிய நண்பகல் கடனை முடித்துக்கொண்டு வருவோம். அதற்குள் உணவு சமைத்துவை' என்று சொல்லிச் சென்ருர். இந்தநேரம் பார்த்து அரக்கன் வசிட்டர் வடிவில்வந்து இன்று நாம் உண்பது ஊனுணவு; ஆதலால் அதனைச் சமைத்துவை. என்று சொல்லிச் சென்ருன்; அரசன் ஊனுணவைச்சமைக்க இங்கிருப்பவர்களுக்குத் தெரியாதே என்று கலங்கினன். அரக்கன் சமையற்காரனுக வந்து சமைத்துவைத்தான். வசிட்டர் வந்தார் உணவுபரிமாறப்பட்டது. உணவைக் கண்டார் இந்தப் புண்ணியதினத்திலே ஊனை உண்பேளு என்னசெய்தாய் என்னை இப்படி அவமதித்தமையால் நீயும் அரக்கனுகப்போய் காடுகளில் போய் திரிந்து அவதிப்படு என்று சபித்தார். அரசன் நடந்ததைச் சொன்னன். முனிவர் சிந்தனைசெய்து 'இது அரக்கன் சூழ்ச்சி என்று வருந்தி, கொடுத்த சாபம் வீணுகாது; ஆதலால் பன்னிராண்டு திரிந்து வேதாரண்யத்தையடைந்து விடுதி பெறுவாய் என்றருளினர். அவ்வாறே அரசன் அரக்கனுகிப் பல துன்பங்களையடைந்து, குறித்த பன்னிரெண்டாவது ஆண்டின் இறுதியில் வேதவனநாதரை வழிபட்டான். சாபநீங்கியது. அரசனுனன். அயோத்திக்குச் சென்ருன். வேதாரண்யேசர் திருவருளையெண்ணி அரசாண்டான்

சில்நாட்கழித்து வேதாரண்யத்தை யடைந்து திருக் கோயிலையும் நகரையும் புதுக்கினான். திருவாபர ணங்கள் பல செய்து வைத்தான். நித்திய நைமித்தி யத்திற்கு வேண்டிய நிலங்களைத் தானம் செய்தான். திருவிழாக்களைச் சிவாகம முறைப்படி நடத்திவைத் தான். இறைவனருளைப் பெற்று அயோத்தியை யடைந்தான்.

விசுவாமித்திரர் வரலாறு.

குசிகமன்னன் மரபிலே காதிஎன்னும் அரசனுக்கு மகனாகப்பிறந்தவன் விசுமாமீத்திரன். அவன் அர சாண்டுவரும் நாட்களில் ஒருநாள் வேட்டையாடப் புறப்பட்டான். காட்டில் வசிட்டருடைய ஆச்சிரமத் தையடைந்தான். வசிட்டர் காமதேனு என்னும் பசு வின் உதவியால் இவனுடைய தானைசேனையனைத்திற்கும் பெரிய விருந்தளித்தார். விசுவாமித்திரன் வியந்து அப்பசுவையே கேட்டான். வசிட்டர் 'அது வந்தால் ஓட்டிக்கொண்டு போ' என்றார். பசு வரவில்லை. விசு வாமித்திரன் படையெடுத்து வந்தான். காமதேனு தன் மூச்சிலிருந்து பல படைகளையும் வீரர்களையும் படைத்து விசுவாமித்திரன் படைகளை யழிக்க முயன் றது. விசுவாமித்திரன் முதன்முறை தோற்றோடிப் போனான். மறுமுறை வசிட்டர்மேல் படை யெடுத்து வந்தான். வசிட்டர் தன் பிரமதண்டத்தை எதிரில் நிறுத்தி முன்போலத் தவஞ்செய்துவந்தார். அது வரு கிற படைகளையெல்லாம் திரும்பிப்போகச் செய்தது. இவ்வண்ணம் தம் படைகள் பயனற்றுப்போனதை மன்னன் தன் உடல் வலியைக்காட்டிலும், படைவலி யைக்காட்டிலும், அரசாட்சியைக்காட்டிலும் தவவலி மையே சிறந்தது எனக்கண்டான். தானும் பிரமரிஷி யாகவேண்டும் என்று கடுந்தவம் புரிந்தான். பல சித்திகளைப் பெற்றான். ஆனாலும் பிரமரிஷி என்ற பதம் கிட்டவில்லை. அதனால் பூமி முழுதும்

அலைந்து கடைசியாக வேதவனத்தை யடைந்தான். முனிவனே! இத்தலம் நான்குவித புருடார்த்தங்களையும் ஒருசேர அளிக்கவல்லது' என ஓர் அசரீரி பிறந்தது. விசுவாமித்திரன் அதிசயித்து மணிகர்ணிகை மேல்கரையில் ஓர் ஆச்சிரமம் அமைத்து தீர்த்தங்களில் முறைப்படி நீராடித் தவமும் பூசையும் செய்து சிவாலயத்தின் அக்கினித்திக்கிலேயுள்ள வன்னிமரத்தடியில் இருந்து திருவைந்தெழுத்துச்செபமும் செய்துவந்தான்.

இங்ஙனமிருக்க திருசங்கு என்னும் அயோத்தி மன்னன் ஒருவன் இந்தச் சரீரத்துடனே சுவர்க்கம் புகவேண்டும் அதற்கு உபகாரம் புரிக என வசிட்டரைக்கேட்டான். அவர் முடியவே முடியாது நீ எடுத்த இந்த தேகம் கன்மதேகம். இத்துடன் புண்ணியபூமியாகிய சுவர்க்கத்திற்கும்போக இயலாது என்றனர். சங்கு மன்னன் விசுவாமித்திரரிடம் வந்து தெரிவித்தான் அவர் வேதநதி முதலான தீர்த்தங்களில் அவனை முழுகச்செய்து மறைவனநாதரையும்வழிபடச்செய்து பன்னிரெண்டு ஆண்டு யாகம் செய்வித்துப் பிரம சிருட்டிக்கு மாறாக ஒரு சொர்க்க நகரத்தையே படைத்து திரிசங்கு மன்னனைத்தேகத்துடன் சொர்க்கமடையச்செய்தார்.

அப்போது ஒருநாள் தேவகணிகையான மேனகை என்பவள் வேதாரணியேசரை வழிபட வேதாரணியம் வந்தாள். அப்போது அங்கே தவஞ்செய்யும் விசுவாமித்திரரைக்கண்டு காதலித்தாள். விசுவாமித்திரர் ஒருவாற்றானும் உடன்படாமையைக்கண்டு 'நீர் கிழவராக' எனச்சபித்தாள். முனிவரும் அவளைக் கிழவியாகச் சபித்தார். மேனகை வேதநதியிலும், மணிகர்ணிகையிலும் நீராடி வழிபட்டு முன்னையிலும் அதிக அழகையும் இளமையையும் பெற்றாள். இதனை அவள் வாயிலாக உணர்ந்த விசுவாமித்திரனும் அவ்வண்ணமே நீராடி வழிபட்டுப் பழைய வடிவத்தைப் பெற்றார்.

அப்போது விசுவாமித்திரர் இவள் கருத்திற்குநாம் உடன்படவில்லையானால் இவளால் வேறு தீமைகளும் விளையக்கூடும் என்றெண்ணி அவளைக் கூடினார். களித்து வாழ்கின்ற நாளிலே, ஒருநாள் மேனகை, முனிவர் பெருமானே! இந்த வேதநதியின் மகிமையைக் கூறுகிறேன் கேளுங்கள் என்று வேண்டினாள் முனிவர் மகிழ்ந்து இசைந்தார். அவள் சொல்லத் தொடங்கினாள்.

முன்னொரு காலத்தே யான் மானாக இருந்தேன். ஒரு வேடன் என்னைத் துரத்தினான். அம்பால் அடிபட்டேன். துன்பந்தாங்காது ஓடிவந்து இந்த வேதநதியில் விழுந்தேன். இறந்தேன். இப்பிறவியை எடுத்தேன். ஆதலால் இந்நதியில் மூழ்கினவர்கட்கு பிறப்பறுவதேயன்றிச் சிவஞானமும் சித்திக்கும் என்றாள். விசுவாமித்திரர் அவளிடம் மயங்கிப் பல ஆண்டு தவத்தை மறந்து இருந்தார். பின்னர் உணர்ந்து அவளையனுப்பிவிட்டுக் கடுந்தவம் புரிந்து வந்தார். இந்திரன் இதனையுணர்ந்து அவர் தவத்தை யழிக்கத் திலோத்தமையை யனுப்பினார். திலோத்தமை விசுவாமித்திரர் மன உறுதியைக்கண்டு இங்கு நின்றால் இவர் சாபம் தருவார் இந்திரலோகம் போனால் அவன் சபிப்பான். ஆதலால் மானுருவந் தாங்கி இந்தக் காட்டில் உலாவுவோம் என்று திரிந்து வந்தாள். ஒருநாள் இவர் பர்ணசாலையின் பக்கத்திலேயே உலாவி வந்தாள். முனிவர் மானைக்கண்டு 'உன்னை இங்கு நிற்காதே தேவலோகம் போகச் சொன்னேனே! ஏன் இங்கு நிற்கிறாய்? நீ உண்மையாகவே மானாகுக என்று சபித்தார். சாபத்தால் நெடுநாள் காட்டிலேயே திரிந்தாள். ஒருநாள் நீர் வேட்கையால் வேதநதியில் நீர் பருகச் சென்றது. அப்பொழுது மானுருவம் மறைந்து பழைய திலோத்தமையானாள். ஆலய வழிபாடு செய்து தேவலோகத்தை அடைந்தாள். வேதவன நாதரை தியானம்

செய்தாள். அத்தவக்கனல் உலகைச்சுட்டது. பிரம தேவன் வேதவனம் வந்து விசுவாமித்திரரைக் கண்டார். நீ எதற்காக தவம் செய்கிருய் என்ருர். விசுவாமித்திரன் நான் பிரம்ம ரிஷியாக தவம் செய்கிறேன் என்ருன். அப்படியாஞல் அப்பதவியைத் தந்தோம் நீ தவத்தை ஒழிக என்ருர். விசுவாமித்திரன் மகிழ்ந்து அப்படியாஞல் வசிஷ்ட முனிவர் வாயால் சொல்லச் சொல்லுங்கள் என்ருர். வசிஷ்டர் அதற்கு சம்மதிக்க இல்லே. பிரமன் முதலிய தேவர்கள் வசிஷ்டரை சபிக்கத் தொடங்கினர். வசிஷ்டர் அஞ்சி நீ உண்மையில் பிரம்ம ரிஷி ஆகிவிட்டாய். மூன்றுலகங்கள் அறிய உண்மையாக சொல்கிறேன். என்ருர். விசுவாமித்திரன் மகிழ்ந்து வசிஷ்ட முனிவருடன் வேதாரண்யத்திலே வாழ்ந்திருந்தார். எங்கும் கிடைக்காதபோது இத்தலத்தில் எனக்குக்கிடைத்தது என்று மகிழ்ந்தார்.

குலகேசன் வரலாறு.

முன்ெெரு காலத்தில் தேவர்களும் அசுரர்களும் பாற்கடலேக் கடைந்தார்கள். அதிலிருந்து கற்பகம் முதலிய மரங்களும், தெய்வப் பெண்களும் தோன்றினர். பிறகு, ஆலகாலவிடம் உண்டாயிற்று. அதனே சிவபெருமான் உண்டு தேவர்களேக்காத்தார். பிறகும் தேவர்கள் பாற்கடலே கடைந்தார்கள். அதிலிருந்து சிதேவி, கௌஸ்துபமணி, குதிரை, ஐராவதம் முதலிய எல்லாம் உண்டாயின. அமுதமும் உண்டாயிற்று. திருமால் அதனே அசுரர்கள் அறியாதபடிக் குடத்திலடைத்து வாயுதேவனிடம்கொடுத்து தேவலோகம் அனுப்பிவைத்தார். அப்போது ஒருகுடம் தவறி வேதாரணியத்தில் விழுந்தது, சிவலிங்கமாயிற்று. வாயு வருந்தி நின்ருன், திருமால் இதனேயறிந்து வாயுவைநோக்கித் திருக்கோயில் எடுக்கச்செய்தார். சிவலிங்கப் பெருமானேப் பிரதிட்டைச் செய்தார். சிவபெருமான் அவ்

விலிங்கத்தில் என்றும் நின்று அமுதேசன் என்னும் பெயரோடு எழுந்தருளியிருக்கிருர். இப்படி எழுந்தருளிய இடத்திற்கு உத்திரகோடி என்று பெயர். இத்தலத்தில் கடலாடி இறைவன் வணங்கியவர்கட்கு எல்லா நன்மையும் எப்பொழுதும் உண்டாகும்.

நர்மதா நதிக்கரையில் சுவேத முனிவர் என்பவர் சுசீலை என்னும் மனைவியோடும் குடகன் என்னும் மகனோடும் வாழ்ந்துவந்தார். அங்கு 12 ஆண்டு மழை இல்லை. பஞ்சம் உண்டாயிற்று. மக்கள் அனைவரும் வேறு வேறு இடத்திற்குச் சென்ருர்கள். சுவேதமுனிவர் முனிவர் கூட்டம் புடைசூழ வேதாரணியத்தில் அகஸ்தியர் ஆச்சிரமத்தை அடைந்தார். மறைவனநாதனை வணங்கி அங்கே வசித்துவந்தார்கள். சின்னுள்கழித்து சுவேதமுனிவர் தன் குடும்பத்தாரோடும் முனிவர் சிலரோடும் தென்கோடியில் உள்ள உருத்திரகோடியை அடைந்து அமுதலிங்கேசரை வழிபட்டு வந்தார். அவர் குமாரனுகிய குடகன் மானசீகமாக பூசைசெய்து வந்தான். இறைவன் காட்சிகொடுத்தார். வரம என்னவேண்டும் என்றுகேட்டார். தேவரீர் என்பெயரைத்தாங்கி விளங்கவேண்டும். நானும், என் தந்தையும், முனிவர்களும் வாழ்கின்ற இடம் எதுவாயிருந்தாலும், வறுமை வராதிருக்கவேண்டும் என்ருர். இறைவனும் அவ்வாறே அருளிச்செய்தார்.

தனபாலன் வரலாறு.

அளகாபுரிக்கு அரசான குபேரனுக்கு தனபாலன் என்ருெரு மந்திரி இருந்தான். அவன் அரசகாரியங்கள் ஒழுங்காக பார்த்துவந்த காலத்து தேவதாசியாகிய கிருதாசி என்பவளைக்கண்டு மயங்கி நெடுநாள் அரசவைக்கு வாராதிருந்தான். அதனுல் கோபமுற்ற குபேரன் நீ காட்டுயானையாகப் போகக்கடவது என்று சபித்தான். தனபாலன் குபேரனை வணங்கி இச்சாபத்தை போக்கும் வழியை சொல்லவேண்டும்

என வேண்டிக்கொண்டான். அப்பொழுது குபேரன் 12 ஆண்டுகள் கழித்து வேதாரணியம் வந்தால் சாபம் தீருமென்றுச்சொன்னான். அவ்வாறே காட்டுயானை யானத் தனபாலன் வேதாரண்யத்திற்கு வந்து மணி கர்ணிகை நீராடித் துதிக்கையிலே நீரை முகந்து பலி பீடத்திற்கு அபிஷேகம் செய்து வணங்கி நின்றான். யானை உருமாறி பழைய உருப்பெற்றான். அளகா புரியை அடைந்தான். குபேரனை அடைந்தான். மீண்டும் மந்திரியாகி எல்லா இன்பங்களையும் அனுப வித்தான்.

தேவர் தொழுமன்ற வரலாறு

சிவபெருமான், ஆனந்த நடராச மூர்த்தியாக எழுந்தருளித் திருநடனம் புரியும் சபைகள் பதினெட்டு உள்ளன. அவற்றுள் ஒன்று வேதாரணி யத்தில் உள்ள தேவபக்த சபை.

முன்னொரு காலத்திலே இரணியனைக் கொன்று அவன் உதிரத்தைக் குடித்த வெறியால் நரசிங்க மூர்த்தி செறுக்குக் கொண்டு எல்லாருக்கும் துன்பம் வினைத்து வந்தார்கள். தாமே பரம்பொருள் என எல் லாரையும் வணங்கும்படி கட்டளையிட்டார். சிவபெரு மான் சரபாவதாரம் எடுத்துத் திருமாலின் நரசிங்க வடிவத்தையும் அவர் செருக்கையும் அடக்கினார். திருமால் சிவபெருமானை நோக்கித் தோத்திரம் புரிந்தார். சிவபெருமான் தேவர்கள் அனைவரோடும் இத்தலத்திற்கு எழுந்தருளி மூலட்டானத்திற்கு முன்பு ஈசானிய பாகத்தில் ஒரு சபையை உண்டாக்கி அதிலிருந்து தேவர்கட்கும் அன்பர்கட்கும் ஆனந்த தாண்டவ தரிசனம் தந்தருளினார். அதுமுதல் இச் சபை தேவபக்தசபை வழங்குவதாயிற்று. இச்சபை யிலிருந்து பெருமான் என்றும் காட்சி வழங்குவார். ஆனாலும் மாதந்தோறும் கிருஷ்ண பட்ச அட்டமி,

குருவாரம் இவைகளில் வழிபட்டால் இம்மை நலன்களையும் எய்தலாம். மாசிமக நட்சத்திரத்திலே வேத நதியில் நீராடி நடராசப்பெருமானை வழிபட்டால் விரும்பிய எல்லாப் போகங்களையும் பெற்று மறுமையில் மோட்சத்தைப் பெறுவர்.

நாசிகேது வரலாறு

விதிசை நதிக்கரையிலே உத்தாலகர் என்னும் முனிவர், முனிவர் கூட்டத்தில் ஒருவராக இருந்து தவஞ்செய்து வந்தார். அப்போது இவருடைய பிரமசரியத்தைக் கண்டு மற்ற முனிவர்கள் நீர் திருமணஞ் செய்து குல விருத்திக்காக ஒரு மகனைப் பெற்று வைத்துப் பின் தவஞ்செய்யலாம் என்றனர். உத்தாலகர் கேட்காமல் தவஞ்செய்தார். ஒரு நாள் இரவு கனவில் இவர் பிரமசரியம் நழுவிற்று. உத்தாலகர் விந்து பூமியில் விழக்கூடாதே என்று எண்ணி அதை ஒரு தாமரையிதழில் ஏற்று ஆற்றில் விட்டார். அது மிதந்து சென்றது. காசி நகரத்தை யணுகிற்று. காசியரசன் பிரதூதரன் என்பவனுடைய மகள் சுகேசினி நீராடக் கங்கைக்கு வந்தாள். அவள் இதனைப் பார்த்து எடுத்து முகர்ந்தாள். நாசியின் வழியாகக் கரு புகுந்து வளர்ந்தது. அரசன் ஐயுற்றுப் பழி நாணி அவளைக்காட்டிலே உற்கட முனிவரிடத்திலே ஒப்படைத்தான். அவர் நிகழ்ச்சிகளை ஞானத்தால் அறிந்து தன்மகளைப் போல வளர்த்து வந்தார். கரு முதிர்ந்து ஓராண்குழந்தை பிறந்தது. உற்கடர் நாசி வழியாகப் புகுந்து நாசி வழியாகவேப் பிறந்ததால் அப்பிள்ளைக்கு நாசிகேதன் எனப்பெயர் சூட்டி வளர்த்து வந்தார். கல்வி கற்கும் பருவம் வந்ததும் அவனிடம் உண்மை வரலாறுகளைச் சொல்லி உத்தாலகரிடமே அனுப்பி வைத்தார். நாசிகேதன் எல்லா முனிவரும் மகிழும்படி நடந்து வந்தான். வேதாவேதங்களைக் கற்றான். இவனுடைய திறமையைக்

கண்ட உத்தாலகர் ஒருநாள் நீ யார் உன் வரலாறு என்ன என்று கேட்டார். நசிகேதன் உண்மையை உரைத்தான். முனிவர் தன் தியான பலத்தால் உண்மையை யுணர்ந்து உன் தாயையும் வரவழை என்றார். அங்ஙனமே சென்று தாயிடம் சொல்ல அவள் இருந்த பழி போதும். இனிப்பழி வேண்டாம் அவர் விரும்பினால் என் பெற்ற தந்தை வளர்த்த தந்தை இருவரிடமும் அனுமதி பெற்று முறைப்படி மணந்து கொள்ளச் சொல் என்றாள். இதை மகன் சென்று தந்தையிடம் சொன்னான். உத்கலர் அவ்வாறே மணந்தார். தன் மாமனாகிய பிரதூதர மன்னனுக்கு ஞானோபதேசம் செய்து வாழ்ந்து வந்தார்.

சில நாள் கழித்து கோதாவரிக் கரையை யடைந்த உத்கலர் நித்யாக்கினிக்கு வேண்டிய சாதனங்களை மறந்து நதிக்கரையிலே வைத்து விட்டு வந்து விட்டார். வீடு வந்ததும் தன் மகன் நசிகேதரை அழைத்து எடுத்துவரும்படி ஆணை தந்தார். அவரும் சென்று பார்த்து இல்லாமையால் வெறுங்கையோடு திரும்பினார். முனிவர் வேறு வது கொண்டுவரக் கூடாதா வெறுங்கையோடு வந்தாயே என்று சினந்து நீ யமலோகம் போ என்று சாபங்கொடுத்தார். அப்படியே நசிகேதன் இறந்தார். தந்தையாகிய உத்கலர் புத்திரபாசம் தாங்கமாட்டாமல் தனயன் பிணத்தை மடியிற்கிடத்திக் கொண்டு கதறியழுதார். நசிகேதசு தந்தையின் துயரந் தாங்கமாட்டாமல் மீளவும் வந்து உடலிற் புகுந்தான். தூங்கி விழிப்பவன் போல எழுந்தான். உத்கலர் மகிழ்ந்து இனி நீ யிறக்க வேண்டாம் எனச் சாப விமோசனம் தந்தார்.

தன் தந்தைக்கு எமலோகத்திலுள்ள நரகங்களைப் பற்றியும் அவற்றில் பல பாவிகள் கிடந்து வருந்துவதைப் பற்றியும் கூறினார். ஆனால் இத்துணைப் பெரிய பாவங்களாயினும் வேதாரணியத்தில் மணி

கர்ணிகை முதலான தீர்த்தங்களில் விதிப்படி நீராடிக் கடவுளை வழிபட்டால் நீங்கும் என்றும் கூறினர். மற்றும் தீர்த்தத்தில் மூழ்கி நற்கதியடைந்த யாக்ஞ வல்லியர், மைத்திரி பாற்கேயி நாரதர் முதலானவர் களின் சரிதங்களையும் சொல்லி தீர்த்த விசேஷங்களை விளக்கினர்.

கல்வெட்டுக்கள்

நம் நாட்டுப் பழைமையான நாகரீகங்களையும், அரசர் மக்கள் வரலாறுகளையும், தான தருமங்களை யும் அறியத்துணையாக இருப்பன கல்வெட்டுக்கள். இக்கோயிலிலும் மூலட்டானத்திலும், பிரகாரங்களி லும் பிற இடங்களிலுமாகச் சுமார் தொண்ணூற்றி ரண்டு கல்வெட்டுக்கள் உள்ளன. அவை 1904-ம் ஆண்டில் அரசியலாரால் படி எடுக்கப்பட்டவை. தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதிகளில் 415 முதல் 507 வரை எண்களாகப் பதிவு செய்யப்பெற் றுள்ளன.

இத் தலத்தைப் பற்றிய கல்வெட்டுக்களில் குறிக்கப் பெற்றுள்ள மன்னர்களும் அவர்கள் ஆட்சி யாண்டுகளும்.

1	பரகேசரி பராந்தகன்	I	(கி. பி.	905 — 947)	42	ஆண்டுகள்.
2	ராசகேசரி ராசராசன்	I	,,	985 —1084	29	,,
3	குலோத்துங்கன்	I	,,	1070 —1120	50	,,
4	குலோத்துங்கன்	II	,,	1113 —1150	37	,,
5	ராசாதிராசன்		,,	1150 —1178	28	,,
6	குலோத்துங்கன்	III	,,	1178 —1218	40	,,
7	ராசராசன்	III	,,	1216 —1246	30	,,
8	ராஜேந்திரன்	III	,,	1264 ——		
9	பிரபுட தேவராயன்		,,	1449 —1465	16	,,
10	பிரதாபசிம்மன்		,,	1763 —1787	24	,,

மாவலிச்சக்கரவர்த்தி எலியாயிருந்து விளக்கைத் தூண்டிய புண்ணியத்தால் அரசனானன். ஆதலின் அரசர்களுக்குத் திருவிளக்கிடுதலின் நம்பிக்கையும்—உறுதியும் இருந்திருக்கிறது. ஆதலால் பெரும்பாலான அரசர்கள் திருவிளக்குக்காகப் பொன்னும் நிலமும் ஆடுகளும் வழங்கிய செய்திகளே மிகுதியாகக் காணப்படுகின்றன.

பராந்தகன் I:— இவன் ஆதித்தச்சோழன் மகன் கி. பி. 905ல் முடி சூடியவன். இவனுக்கு வீரநாராயண சோழன் என்றும் பெயர் உண்டு. இவன் பாண்டிய நாட்டை வென்றவன். மதுரை கொண்ட கோப்பரகேசரி என்று மெய்க்கீர்த்தியிற்குறிக்கப்பெருகின்ருன். இலங்கையையும் வென்றவன். அதனல், சங்கிராம ராகவன் எனச் சிறப்பிக்கப்பெறுகின்றவன். இவன் மகன் கண்டராதித்த தேவர். கண்டராதித்த தேவர் தந்தையின் வெற்றியைத் தாம் பாடிய திருவிசைப்பாவில் பாராட்டியுள்ளார்.

இவனுடைய ஆட்சி மூன்ருவது ஆண்டில் இக்கோயிலுக்கு ஏதே நிவந்தமும், ஒன்பதாவதில் ஒரு விளக்கிடத் தொண்ணூறு ஆடுகளும், இருபதாவது ஆண்டில் பொன்னும், இருபத்தெட்டாவதில் ஒருவிளக்குக்கு தொண்ணூறு ஆறுகளும், கோயிலுக்குநிலமும், இருபத்தேழில் ஒரு விளக்குக்குத் தொண்ணூறு ஆடுகளும், ஆக ஆட்சியாண்டு ஐந்துமுதல் முப்பத்தைந்து வரையில் பல தானங்களைச் செய்திருக்கிருன். இக்கோயிலுக்கு முதல் பராந்தகன் செய்த கொடை மிகப் பலவாகும். அவ்வண்ணமே. இராசகேசர் இராசராசன். முதலும் பல நிபந்தங்கள் ஏற்படுத்தி யுள்ளான் இவன் இரண்டாம் பராந்தகன் மகன். கி. பி. 985 முதல் கி. பி. 1014 வரை ஆண்டவன். திருமுறைகளைக்கண்ட பெருமை இவனுக்கே உரியது. அருண்மொழிவர்மன், அபகுலசேகரன், மும்முடிச் சோழன்

என்ற பட்டப்பெயர்களும் இவனுக்குண்டு. இவனைப் பற்றிய கல்வெட்டுக்கள் ஏழுக்குமேல் உள்ளன.

முதல் குலோத்துங்கன்.

இவன் வடநாடு, பாண்டியநாடுகளை வென்றவன். குடகுமலை நாட்டையும் கைப்பற்றியவன். கருணாகரத் தொண்டைமானை அனுப்பி கலிங்கத்தைக் கைப்பற்றியவன். சுங்கந்தவிர்த்த சோழன், திரிபுவனச் சக்கிரவர்த்தி பேரம்பலம், பொன்வேய்ந்த சோழன், திருநீற்றுச்சோழன் என்ற பெயர்களும்உண்டு. கோபிநாதராவ் அவர்களும், சீனிவாசஅய்யர் அவர்களும், பெரிய புராணம் பாடுவித்த அநபாயனும் இவனே யென்றும், அதற்காதாரமாக திரிசூலம், திருவானைக்கோயில் கல்வெட்டுகள் துணை செய்யுமென்று கூறுவர். இவனுடைய கல்வெட்டுக்களும், பத்துகல்வெட்டுக்கள் உள்ளன.

இரண்டாம் குலோத்துங்கன்.

பேரம்பலம் பொன்வேய்ந்தது முதலியசெயல்கள் இவனையே குறிக்கும்என்று டாக்டர் இராசமாணிக்கம் பிள்ளை கூறுவர். பெரிய புராணம் முதலிய இலக்கியங்களில் வரும்சொற்றொடர்கள் ஒத்தகருத்துடையன என்பது அவர் கருத்து.

இராசாதிராசன்.

கி.பி. 1151 முதல் 1177 வரை அரசாண்டவன். சிவபக்தன். தமிழ் நாட்டில் பல கோயில்களுக்கு நிவந்தங்கள் அளித்துள்ளான். இவன் ஆட்சியின் இருபத்தெட்டாம் ஆண்டில் இக்கோயிலுக்கு விளக்கிட அளித்த நிவந்தங்கள் பல.

மூன்றும் குலோத்துங்கன்.

இராசாதிராசனுக்குப் பின் முடிசூடியவன் வீரராசேந்திரன், திரிபுவன தேவன் என்ற பெயர்களும், இவனுக்குண்டு. இவன் காலத்தில் வீராந்தகப் பல்லவதரையர் ஆஸ்தான வித்துவானுக இருந்தார். இவன் காலத்தில் தண்டியாசிரியரும், ஆடல் வல்லோரில் ஒருவராய் கனகசபையில் நடித்து வந்தார் என்பதை தண்டியலங்காரப் பாயிரச் செய்தியறிவிக்கிறது. இவருடைய கல்வெட்டுகள் 15 க்கும் மேல் உள்ளன.

ராசராசன் III.

இவன் மூன்றும் குலோத்துங்கன் மகன். மாறவர்மன் சுந்தரபாண்டியன் Iனல் வெல்லப்பட்டு கோசலநரசிம்மதேவனுக்கு உதவியால் இழந்த நாட்டைத் திரும்பப்பெற்றவன். கோப்பெருஞ்சிங்கனை வென்றவன். இவனும் திருவிளக்குக்கும், உணவுக்குமாக ஆடுகளும், நிலங்களும் அளித்த செய்தியை சுமார்இருபதுக்கும் மேற்பட்ட கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. இங்ஙனமே மூன்றும் ராஜேந்திரன் பிரபுடதேவராயனை பிரதாபசிம்மன் முதலியவர்களும், நிலமளித்து நிலமும் பொன்னும் பிறவுமளித்த செய்திகளை எஞ்சிய கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன.

ஓர் அரசன் வேதவனமுடையார் திருமுன்பு திருப்பதிகம் விண்ணப்பிக்க உரிமை வழங்கிய செய்தி உணர்த்தப் பெறுகின்றது. ஒன்று திருவாபரணம் அளித்ததையும், ஒன்று திரிவிக்ரமன் சந்திக்கு நிலம் வழங்கியதையும் அறிவிக்கிறது.

வாணதிராயன் கட்டளையும், பாண்டிநாட்டு முத்தூர்க்கூற்றத்தைப்பற்றிய குறிப்பும், நிலம் விற்றதும், எதிரிலிசோழ கங்கை நாடாள்வான் என்பவன் இக்கோயிலுக்குறிய அடிமைகளில் ஐந்து ஆண் ஐந்து

பெண்களை 500 காசுக்கு விற்றதும், சிங்கண்ண தண்டநாயகன் படைஎடுப்பும், கோடிக்குழகர் கோயில் திருப்பணியும், அர்ச்சகருக்குச்சில சிறப்புரிமைகள் வழுங்கியதுமாகிய பிறசெய்திகளும் குறிக்கப் பெற்றுள்ளன.

கல்வெட்டுக் குறிப்புக்கள்:—

415 of 1904. வேதாரணியேஸ்வரர் கோவில் கருப்பக்கிருகத்தின் தென்பக்கம் சுவரில் திரிபுவன சக்ரவர்த்தி குலோத்துங்க சோழ தேவருக்கு யாண்டு நான்காவது (11—3—1182 வியாழக்கிழமை) கங்கை கொண்டான் ராசராச தேவனை பொத்தபிச்சோழன் என்பவனால் உம்பளநாட்டு குன்னூர் நாட்டுத் திரு மறைக்காட்டுக் கோவிலுக்கு ஒரு விளக்கிடப் பொன் கொடுத்தது.

416/1904. அதே சுவர்:— மதுரையும் ஈழமும் பாண்டியன் முடித்தலையுங்கொண்ட குலோத்துங்க சோழ தேவர்க்கு (III) யாண்டு 29வது 1 விளக்குக்குப் பொன் அளித்தது.

417/1904. அதே சுவர். ஷை அரசன் பதினைந்தாவது ஆண்டில் ஒரு விளக்கிடப் பொன் அளித்தது. (சிதிலமானது)

418 மூலஸ்தான சந்நிதியின் முன்பக்க மண்டபத்தின் தென்பக்கச்சுவரில் திரிபுவன சக்ரவர்த்தியான இராஜேந்திர சோழ தேவர்க்கு ஆண்டு ஒன்பதாவது ....ஒரு விளக்குக்கு நிலம் விட்டது. (டாக்டர் கீல் ஹார்ன் என்பவர் இந்த நாளை கி. பி. 12–1–1285 செவ்வாய்க்கிழமை என்று கணக்கிடுகிறார்.) (See I. B. I. D. Vol. 8 Page 273)

419. அதே சுவர்...............சோழதேவன் ஆண்டு நாலாவது ஒரு வீர சிங்க வன்மரால் ஒரு விளக்குக்குப் பொன் கொடுக்கப்பட்டது.

420. அதே சுவர். திரிபுவனச் சக்கரவர்த்தி இராசராச தேவர்க்கு ஆண்டு ஐந்தாவது ....ஒரு விளக்கிடப் பொன் அளிக்கப்பட்டது. (இக் கல்வெட்டின் தொடக்கமும் இதன் அடியில் மூன்றுங் குலோத்துங்கனுடைய கல்வெட்டுப்பகுதியும்கட்டிடத்திற்குள் அகப்பட்டுள்ளன).

421. அதே சுவர். திரிபுவனச் சக்கரவர்த்தி இராசேந்திர சோழருக்கு யாண்டு 6ம் யாண்டில் வாணதரையனுக்கு இட்ட உத்தரவு.

422. அதே மண்டபத்தின் வடபக்கச்சுவர். இராசகேசரி வன்மஞன குலோத்துங்கசோழதேவற்கு I யாண்டு 2 வதில், கோவில் வழிபாட்டுக் காலத்தில் திருப்பதியம் விண்ணப்பிக்க ஒருவர்க்கு உரிமை வழங்கியது.

423. அதே சுவர்: திரிபுவன சக்கரவர்த்தி ராஜேந்திர சோழதேவற்கு (III) யாண்டு (6–5–1250 புதன் கிழமை) ஒரு விளக்குக்குக் கொடுத்த நிலத்தை முப்பது வட்டம் சிவ பிராமணர்கள் மேற் பார்ப்பதாக ஏற்றுக்கொண்டது. See (I. B. I. D, Page 272.)

424. அதே சுவர். திரிபுவன சக்கரவர்த்திஇராசராசதேவனுக்கு ஆண்டு 17வதில் கோயிலுக்குத் திருவாபரணம் அளித்தமை. (இதில் ஒரு பகுதி உடைந்தது.)

425. அதே சுவர்: இராசகேசரி வர்மஞன திரிபுவன சக்கரவர்த்தி குலோத்துங்க சோழ தேவர்க்கு (I or II) ஆண்டு 23வது .... சிதைந்த குறிப்பு.)

426. அதே சுவர்: மதுரையும், ஈழமும் பாண்டியன் முடித்தலையும் கொண்ட திரிபுவனச் சக்கரவர்த்தி மூன்றுங் குலோத்துங்க சோழதேவற்கு யாண்டு 20வது ஒரு விளக்குக்கு 80 ஆடுஅளித்தது,(இறுதி கட்டிடத்திற்குள்).

427. அதே சுவர்: மதுரையும் கரூரும் பாண்டியன் முடித்தலையும் கொண்டு. வீரர்களையும் வெற்றி கண்ட திரிபுவன சக்கரவர்த்திகள் திரிபுவன வீர தேவர்க்கு (1178–1216) யாண்டு 32..........வது (குலோத்துங்கன் III, 21–12–1209 திங்கட்கிழமை (எபிகிராபிகா இண்டிகா (Vol. VIII Page 266).

428. வேதாரண்யேசர் முன் மண்டபத்து வடபக்கம் சுவரில் திரிபுவன வீரதேவரான குலோத்துங்க சோழ III தேவர்க்கு 35வது ஆண்டு ஒருவிளக்குக்குப் பொன் அளித்த செய்தி.

429. அதே சுவர்: திரிபுவன சக்கரவர்த்தி இராசராச தேவர்க்கு III யாண்டு 27வது ஒரு விளக்குக்குப் பொன் அளித்த செய்தியும், ஒரு விளக்குக்கு நிலம் அளித்தமையும்.

430. அதே சுவர்:— மதுரையும் ஈழமும் பாண்டியன் முடித்தலையுங்கொண்ட திரிபுவனசக்ரவர்த்தி குலோத்துங்கசோழ III தேவர்க்கு யாண்டு 20வது, ஒரு விளக்குக்குப் பொன் கொடுத்தது. (இது சிதைந்ததும் முற்றுப்பெருததுமான கல் வெட்டு) அதன் அடியில் ஒரு கல்வெட்டு சிதைந்துள்ளது. (3–5–1198 ஞாயிறு என்று எபிகிராபிகா இண்டிகா பக்கம் 265 கூறும்.)

431. அதே சுவர்:— திரிபுவனசக்ரவர்த்தி இராஜராஜ தேவர்க்கு யாண்டு 27 வதில் நிலமளித்தசெய்தி.

432. அதே சுவர்:— மேற்படி அரசன் 22 மியாண்டு நிலமளித்தசெய்தி,

433. அதே மண்டபத்திலுள்ள ஒரு தூணில் மதுரைகொண்ட பரகேசரி வர்மனை........................ (905—947) (முதலாம் பராந்தகனை இருக்கலாம்) ஆண்டு மூன்ருவதில்..........முற்றுப்பெருத கல்வெட்டு.

434 அதே தூணில் மேற்படி 'அரசன் ஆண்டு 35வதில் ஒரு விளக்குக்காக தொண்ணூறு ஆடுகளை கொடுத்தது.

435. அதே மண்டபத்தில் வேறொரு தூணில் ஆண்டு முப்பதாவதில் ஒரு விளக்குக்கு ஆறு இலைக் காசுகள் கொடுத்தது.

436. அதே தூணில் பரகேசரிவர்மன் ஆண்டு ஒன்பதாவதில் ஒரு விளக்குக்கு 90 ஆடு அளித்தது.

437. அதேதூண்: இராசகேசரிவர்மனை முதலாம் இராசராசன் (985—1013) யாண்டு பதினைந்தாவதில் 1 விளக்குக்கு 90 ஆடு கொடுத்தது.

438. அதே தூணில்: பரகேசரிவர்மனை..........
சோழன் யாண்டு 8வதில் சிதைந்த கல் வெட்டு.

439. அதே தூண்: இராசகேசரி வர்மனை முதலாம் இராசராசன் கோவிலுக்கு நிலமளித்தது.

440. அதே தூண்: இராசகேசரி வர்மனை முதல் இராசராசன் ஆண்டு ஆறில் ஒரு விளக்குக்கு 90 ஆடு கொடுத்தது.

441. அதே தூணில் மேற்படி அரசன் ஆண்டு ஒன்பதில் பொன் கொடுத்தமை. இதில் பாண்டிய நாட்டு முத்தூற்றுக்கூற்றம் குறிப்பிடப்படுகிறது.

442. அதே தூணில்: இராசகேசரிவர்மன் ஆண்டு ஆறில் .... சிதைந்த கல்வெட்டு

443. அதே தூணில் பரகேசரி வர்மன் .... சிதைந்த கல் வெட்டு.

444. அதே மண்டபத்து 3ம் தூணில் மதுரை கொண்ட பரகேசரி வர்மனை பராந்தக தேவர்க்கு ஆண்டு 20ல் பொன் கொடுத்தது.

445. அதே தூணில். மேற்படி அரசன் ஆண்டு 28வதில் ஒரு விளக்குக்கு 90 ஆடுகளை இவனுடைய அரசகாரியம் பார்பாஞன மருதூர் அருநிதிக்கலியன் அளித்தது.

446. அதே தூணில். மேற்படி அரசன் .... நாள் அறியப்படவில்லை. ஒரு விளக்குக்கு 90 ஆடுகள்

447. அதே தூணில் மேற்படி அரசன் கோவிலுக்கு நிலமளித்தது.

448. அதே தூணில் ஷை ஷை ஆண்டு 6ல் ஒரு விளக்குக்கு 90 ஆடு.

449. ஷை ஷை ஷை ஷை ஆண்டு 27ல் ஒரு விளக்குக்கு 90 ஆடு.

450. அதே மண்டபத்து நான்காவது தூணில் மேற்படி அரசன் ஆண்டு 20ல் ஒரு விளக்குக்கு 90 ஆடு

451. அதே தூணில். மேற்படி அரசன் ஆண்டு 18ல் ஒரு விளக்குக்கு 90 ஆடு.

452. ஷை ஷை ஷை ஷை 25ல் ஷை ஷை 90 ஆடு.

453. அதே தூணில் மேற்படி அரசன் ஆண்டு 13ல் பொன்னளித்தது.

454. ஷை ஷை ஆண்டு 18ல் ஒரு விளக்குக்கு 90 ஆடு.

455. அதே தூணில் ஷை அரசன் ஆண்டு 30ல் ஒரு விளக்குக்கு 90 ஆடு.

456. மேற்படி ஆண்டு 27ல் 2 விளக்குக்கு 180 ஆடு.

457. ஷை ஷி சிதைந்த கல்வெட்டு

458. ஷை ஆண்டு 13ல் சிதைந்த கல்வெட்டு.

459. மேற்படி மேற்படி ஆண்டு 5ல் ஒரு விளக்குக்கு 90 ஆடு

460. தியாகராசர் சன்னதி தென்புறச் சுவரில் திரிபுவன சக்கரவர்த்தியான இராசேந்திர சோழ III தேவர்க்கு ஆண்டு 16ல் 1—5—1862 திங்கட்கிழமை திரிவிக்ரமன் சந்தியான திருவிழாவுக்கு நிலம் விளக்குக்காக ஆகும் கொடுத்த செய்தி. எபிகிராபிஃகா இண்டிகா (வால் 8 பக்கம் 273.)

461. முன் மண்டபத்து ஒரு தூணில் இராசகேசரி வர்மனை இராசராசதேவர்க்கு (985–1013) ஆண்டு 14ல் .... சிதைந்த கல்வெட்டு.

462. அதே தூணில் அதே அரசன் ஆண்டு 1900 ....சிதைந்த கல்வெட்டு.

463. ஷை பரகேசரி வர்மனுடைய ஆண்டு 14ல் சிதைந்தது.

464. ஷை ஒரரசனுடைய ? யாண்டு 16வதில் நிலம் அளித்தமை.

465. தியாகராசா முன் மண்டபத்து 2 வது தூணில் மதுரைகொண்ட பரகேசரி வர்மனை பராந்தகன் I .... ஆண்டில் ஒரு விளக்குக்கு 90 ஆடு அளித்தது.

466. அதே மண்டபத்து மூன்றும்தூணில் இராசகேசரி வர்மன் ஆண்டு 3வதில் ஒரு விளக்குக்கு 90 ஆடு இதன் பலபகுதிகள் உடைந்துள்ளன.

467. ஷ ஷ 8ம் ஆண்டில் ஒரு விளக்குக்காக தானம் அளித்தமை.

468. அதே மண்டபத்து நான்காம் தூணில் மதுரைகொண்ட பரகேசரி வன்மன் ஆட்சி ஆண்டு 17வது ஒரு விளக்குக்காக நிலதானம் செய்தது.

469. ஷ ஷ ஷ மன்னன் ஆண்டு 28 வதில் 90 ஆடுகள் அளித்தமை: இக்கல்வெட்டின் பகுதிகள் உடைந்துள்ளன.

470. ஷ ஷ 5வது தூணில் இராசகேசரி இராசராசனுடைய யாண்டு 15வதில் 180 ஆடுகள் இருவிளக்குக்காக.

471. அதேமண்டபம் ஆருவது தூணில் ஷ மன்னன் யாண்டு 20வது (சிதைவு).

472. ஷ ஷ பரகேசரிவன்மன் யாண்டு 6வதில் ஒரு விளக்குக்கு 90 ஆடு

473. ஷ 7வது தூணில் பரகேசரிவன்மன் யாண்டு 19ல் 2 விளக்குக்காக நிலம் வழங்கியது.

474. ஷ ஷ மன்னன் ஆட்சி 6வதில் 90 ஆடு. (முடிவு சிதைந்தது)

476. அதே கோவிலின் இராமனுதாஸ்வரர் சந்நிதி முன் மண்டபத்து முதல் தூணில் பரகேசரி பன்மனுடைய யாண்டு ? ஒரு விளக்குக்கு 90 ஆடு.

477. ஷ தூணில் இராசகேசரிவன்மனுடைய 27வது (முற்றுப்பெருதது.)

478. ஷ ஷ மதுரைகொண்ட பரகேசரி வன்மனுடைய 30வது யாண்டில் 2 விளக்குக்கு 180 யாடுகள் அளித்தது.

479. ஷை ஷை ஷை மன்னன் 15வது யாண்டில் ஒரு விளக்குக்கு 90 ஆடு.

480. ஷை தூணில் மேற்படி மன்னன் 15வது யாண்டில் 2 விளக்குக்கு 180 ஆடு.

481. ஷை 2வது தூணில் ஒரு கலிகேசரி என் பவனுல் ஒரு விளக்குக்கு 90 ஆடு.

482. ஷை மேற்படி மன்னனுடைய 18வது யாண்டில் ஒரு விளக்குக்கு 90 ஆடுகள்.

483. மேற்படி இராசகேசரி வன்மனுடைய 10ம் ஆண்டு 1 விளக்குக்கு 90 ஆடுகள்.

484. மேற்படி பரகேசரிவர்மனுடைய 8ம் ஆண்டு ஒரு விளக்குக்கு 90 ஆடுகள்.

485. மேற்படி பரகேசரி வர்மனுடைய7ம்ஆண்டு மேற்படி தானம் செய்தது.

486. மேற்படி 32ம் ஆண்டு மேற்படி 90 ஆடு தானம் செய்தது.

487. மேற்படி இராசகேசரி வன்மன் 26ம்ஆண்டு 2 விளக்குக்கு 180 ஆடு.

488. மேற்படி பரகேசரி வன்மன் ....சிதைந்தது.

489. மேற்படி கோவிலின் 2ம் கோபுரத்தில் நுழைவு வாயிலின் இடது பக்கத்தில் பிரபுடதேவராய மகாராயரால் (1449–1465) சகம் 1886ல் நிலம் விற்ற செய்தி.

490. விஜய நகர வீரபிரதாபதேவமகராயர்சகம் நிலம் அளித்தமை. (சிதைந்த கல்வெட்டு).

491. அதே கோபுரத்தில் தரையிற் பாவியுள்ள கல்லில்: மஹாராஷ்டிர பிரதாபசிம்ம மகாராஜாவின் மகனை துளசா மகாராஜாவால் (1763 to 1787) சிதைந்தது

492. அதே கோவில் முதல் பிரகாரத்துத் தென் புறச்சுவரில் திரிபுவன சக்கரவர்த்திஇராசேந்திரசோழ III தேவற்கு யாண்டு 33வது........ நிலமளித்த செய்தி (பலபகுதி உடைந்தன.)

493. மேற்படி .... ஆட்சியாண்டில் 1 விளக்கு நிலம்.

494. மேற்படி பிரகாரத்து மேல்பக்கச் சுவரில்: இராஜேந்திர சோழன் நிலம் அளித்தது. இவன்நிலம் அளித்த நாளைக்குறித்து Dr. கீல் ஹாரன் என்பவர் ஆய்ந்து அபர பட்சம் என்பது தவறு. பூர்வ பட்சம் எனவும். அது 2–1–1864 புதன் எனவும் முடிபு கட்டியுள்ளார். (See E.P.Indi Page 274).

495. அதே சுவர்: திரிபுவன சக்கரவர்த்தி ராச ராச தேவனுடைய யாண்டு 27வது நிலமளித்தசெய்தி [நாள் தவறு]

496. மேற்படி கோயிலின் முதல் பிரகாரத்து மேற்குப்பக்கச்சுவரில் மேற்படி மன்னனுடைய ஆட்சி யாண்டு 19வதில்........[கல்வெட்டின் தொடக்கம் கட்டிடத்திற்குள்] ஒரு விளக்குக்கு நிலம் அளித்தது. 11–6–1234 ஞாயிற்றுக்கிழமை என்று [I. B. Indi Page 269.]

497. மேற்படி பிரகாரம் வடபக்கச் சுவரில் இராஜேந்திர சோழ III தேவனுடைய 21வது யாண்டு நிலமளித்த செய்தி.

498. மேற்படி சுவரில்: திரிபுவன சக்கரவர்த்தி இராசாதிராசதேவர் II யாண்டு 14ல் 1விளக்குக்கு நிலம்

499. அதே சுவரில்: இராசஇராசன் 3ம்யாண்டு 5 ஆண்களையும், 5 பெண்களையும் வர்க்கத்தாருடன் 1000 காசுக்கு ஆரியன் பிச்சனை எதிரிலி சோழ கங்கை நாடாள்பவனை மாவட்டக் காவலதிகாரி விலைக்கு வாங்கி கோவிலதிகாரியிடம் அளித்தசெய்தி

500. அதே சுவர் மேற்படி அரசன் 8ம் ஆண்டு ஒரு விளக்குக்கு நிலம் அளித்த செய்தி.

501. அதே சுவர்: மேற்படி அரசன் 30ம் யாண்டு சிங்கணதண்ட நாயகன் படை எடுத்ததும் கோடிக்குழகர் கோயில் திருப்பணியும் குறிக்கப்பெற்றுள்ளன. திருவண்ணமலை கல்வெட்டு(See 498/1902) சிங்கணதண்டநாயகன் ஒருவன் இராஜேந்திர சோழ தேவனுடைய (1850-1851) 5வதுயாண்டிலும் குறிக்கப்பெறுகின்றான். இருவரும் ஒருவரேயா வேறு என்பது அறியக்கூடவில்லை. இதன் பகுதிகள் பல சிதைந்துள்ளன,

502. அதே சுவரில்: இராசராச தேவனுடைய யாண்டு 24ல் ஆரியன்பிச்சன் 2 பெண்களை விற்ற செய்தி குறிக்கப்பெற்றுள்ளது.

503. அதேசுவர் இராசேந்திர சோழதேவற்கு யாண்டு 12ல் கோயிலுக்கு நிலமளித்த செய்தி குறிக்கப்பெறுகின்றது. **C. P. No. 40 of Mr. Sewell's List** சகம் 1418 கி. பி. 1416 குரோதியாண்டு தேவகன்மி சண்டேசரால் அர்ச்சகருக்குச் சில உரிமைகள் வழங்கியது.

இவைகளை நோக்கும்போது கல்வெட்டு முழுதும் கிடைத்தால் சுவையான பலவரலாறுகள் வெளிப்படக் கூடும் என்று தோன்றுகின்றதல்லவா!.

தலத்தைச்சார்ந்த பிற கோயில்கள்.

எல்லா ஊர்களிலும் உள்ளனபோல இங்கும் ஐயனர், மாரியம்மன், பிடாரியார். முதலிய கிராம தேவதைகளின் கோயில்கள் உள்ளன. வேதாமிர்த ஏரிக்குப்பக்கத்தில் உள்ள விசுவநாதர் கோயிலும் பட்டுக்கோட்டை தாலூகாவில் உள்ள சின்ன ஆளுடை யார் கோயிலும், ஸ்ரீ சிதம்பரேஸ்வரர் கோயிலும் இத் தலத்தைச் சேர்ந்த கோயில்களாம்.

வழிபட்டவர்களும், வசித்தவர்களும்.

திருஞானசம்பந்த சுவாமிகளும் திருநாவுக்கரசு சுவாமிகளும் சோழநாட்டுத்தலங்கள் பலவற்றையும் வணங்கிக்கொண்டு திருமறைக்காடாகிய இத் தலத்தை அடைந்தார்கள். கோயிலுக்குச்சென்றார் கள். ஆலயத்தின் நேர்முக வாயில் அடைபட்டிருந் தது. அங்கிருந்தவர்கள் வேதங்கள் பூசித்துச்சென்ற அந்தக்கால முதல் நேர்முக வாயில்கள் அடைப் பட்டிருப்பதாகவும், பக்கத்து நுழைவாயில் வழியாகச் சென்று பூசை முதலியனவற்றை நடத்தி வருவதாக வும் அறிவித்தார்கள். இவைகளைக்கேட்ட திருஞான சம்பந்தர் அப்பரை நோக்கி, அப்பரே! தாங்கள் வேதங்கள் அடைத்த நேர் வாயிலைத் திறக்கப்பாடுங் கள் எனவேண்டினர். அப்பர் சுவாமிகளும் இதுவும் திருவருளாணைபோலும் என்றுஎண்ணி "பண்ணினேர் மொழி" என்னும் பதிகத்தைப் பாடியருளினர். பத்துப் பாடல்கள் ஆயின. கதவு திறக்கவில்லை. அப்பர் சுவாமிகள் மனம் வருந்தி "இரக்கம் ஒன்றிலீர் எம் பிரானிரே! சுரக்கும் புன்னைகள் சூழ்மறைக்காடரோ, சரக்க இக்கதவம் திறப்பிம்மினே" எனப்பாடினர். உடனே திருக்காப்பு நீங்கியது. கதவும் திறந்தது. இருவரும் அடியார்கள் புடைசூழச்சென்று இறை வனை வழிபட்டனர். பதிகம்பாடி வணங்கினர். ஆரா

இன்பவெள்ளத்தில் ஆழ்ந்தனர். வெளிப்போந்து பல மூர்த்திகளையும் வணங்கி வலமாக வந்து சந்நிதியை யடைந்தனர். அப்போது அப்பர் சுவாமிகள் சம்பந்தரிடம் இந்தக்கதவு எப்போதும் திறக்கவும் மூடவும் இருக்கும் வண்ணம் அடைக்கப்பாடுதல் வேண்டும் என வேண்டினர். சம்பந்தர் 'சதுரம் மறைதான்' என்ற பதிகம் பாடினர். முதற்பாட்டிலேயே கதவும் மூடிக்கொண்டது. இந்த அதிசயத்தைக்கண்ட அடியார்கள் வியந்து இருவரையும் போற்றினர்; புகழ்ந்தனர், அந்நாள் முதல் திருக்கதவும் அடைக்கவும் திறக்கவும் கூடியதாயிற்று.

திருநாவுக்கரசர் பதிகம் பாடிப் புறக்கதவைத் திறந்து பெருமானைத் தரிசிக்கச்செய்ததுபோல ஆணவமலமாகிறகதவையும் திறந்து அருள் வெள்ளமாகிய இறைவனை எல்லா ஆன்மாக்களையும் காணச் செய்வர் என்பதைக்கற்பனைக் களஞ்சியமாகிய சிவப்பிரகாச சுவாமிகள் நால்வர் நான்மணி மாலையில் "ஆணவமாகும் கபாடமும் மன்திறந்து நோயிலியாகிய சொல்லிறை காட்டுவன் நோக்குதற்கே" என்று அருளுகின்றார். ஆகையால் ஞானசம்பந்தப்பெருமானும், அப்பர்சுவாமிகளும் இத்தலத்துச் சிலநாள் எழுந்தருளியிருந்தமை புலனாகும். சுந்தரர்பெருமான் எழுந்தருளிவந்து 'யாழைப்பழித்தன்ன' என்னும் பதிகம் பாடிப்போற்றியுள்ளனர்.

திருவிளையாடற்புராண ஆசிரியராகிய பரஞ்சோதி முனிவர் இத்தலத்து வாழ்ந்த பெரியார்களில் ஒருவர். தலபுராணம் ஒன்று இவராற்பாடப்பெற்றது.

அருணகிரியார்: சந்தப்பாடலுக்குத் தந்தையாகிய அருணகிரிநாதர் இத் தலத்தில் எழுந்தருளியுள்ள மேலக்குமரர்மீது மூன்று திருப்புகழ் பாடியுள்ளார்.

அகோர தேவர்: இவரும் இத்தலத்தில் வாழ்ந்த பெரியார் ஆவர். சைவஅபிஷிக்த மரபைச் சேர்ந்தவர். இத்தலத்திற்கு ஒரு புராணம் இயற்றியுள்ளார்.

சேக்கிழார் பெருமான்: சமயாசாரியர்களின் சரித்தை உருவாக்கச் சேக்கிழார் பெருமான் இத்தலத்திற்கு வந்து வழிப்பட்டிருக்கிறுர்கள் என்பது பெரிய புராணத்தில் அவர் கூறும் இயற்கை வருணனைகளால் அறியப்படுகிறது.

நம்பியாண்டார்நம்பிகள்: திருத்தொண்டர் திருவந்தாதியில் 'மணியினை' எனவரும் பாடலால் நம்பிகளும் இங்கு வந்து வழிபட்டுச் சென்றவராதலை அறியலாம்.

சின்னத்தம்பிப் புலவர்: யாழ்ப்பாணத்துச் சைவப் புலவர்களில் ஒருவரும் மறைசையந்தாதி என்ற சிறு நூலை இயற்றியவர்.

தாயுமான அடிகள்: இவர்கள் இந்த ஊரிலே வேளாள மரபிலே கேடிலியப்பப்பிள்ளைக்கும்.............. அம்மைக்கும் மகனுகத் தோன்றியவர். வேதசித்தாந்த சமரசசன்மார்க்கம் நிலைக்கப் பாடுபட்டவர். சிறந்த ஞானி. சிலரால் செய்யப்பட்டவை தாயுமானவர் பாடல் என்னும் பிரபந்தம்.

இவையன்றித் தனிப்பாடல் திரட்டு, 11ந் திருமுறை முதலியவற்றிலும் இத்தலத்தைப்பற்றிய குறிப்புக்கள் உள்ளன.

ஸ்ரீ வேதாரண்யேஸ்வரஸ்வாமி திருக்கோயில், வேதாரணியம்.

நிர்வாகம்.

ஸ்ரீ வேதாரண்யஸ்வாமி திருக்கோயில்: ஆதியில் வடபாதிமங்கலம் திரு. வ. சோ. தியாகராஜ முதலியார் அவர்களின் முன்னோர்களின் பரிபாலனத்திலிருந்து வந்திருக்கிறது. 17ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் நிர்வாகம் அவர்களிடமிருந்து ஸ்ரீ-ல-ஸ்ரீ தில்லைநாயகத் தம்பிரான் அவர்கள் கைக்கு மாறியிருக்கிறது. அவர்கள் சுமார் 80 ஆண்டு காலம் நிர்வாகத்தை சிறப்பாகவும் திறமையுடனும் நடத்தி பல் திருப்பணிகள் செய்துள்ளார்கள்.

அவர்கள் காலத்திற்குப் பிறகு இக்கோயிலின் நிர்வாகம் இயாழ்ப்பாணத்திலுள்ள தனது குரு பரம்பரையினரைச்சேரவேண்டும் என அவர்கள் விரும்பி செய்த ஏற்பாட்டின்படி நிர்வாகம் வரணி ஆதீனசபையினரின் கைக்கு மாறியது. வரணி ஆதீன சபையினர் தங்கள் பிரதிநிதி ஒருவரை இங்கு அனுப்பி அவரை கோவிலின் பரம்பரை தர்மகர்த்தாவாக பணியாற்றி வரும்படி செய்தனர்.

இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் இதை ஆட்சேபித்து, கோவிலின் நிர்வாகம் தங்களிடம்தான் இருக்க வேண்டுமென வடபாதிமங்கலம் திரு சோமசுந்தரமுதலியார் அவர்கள் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து, பல ஆண்டுகள் நீதி விசாரணைக்குப் பிறகு கோயிலின் நிர்வாகம் வரணி ஆதீன சபையினரிடம்தான் இருக்கவேண்டும் என 1923ல் தீர்ப்பு வழங்கப்பட்டது.

அதன்படி இயாழ்ப்பாணம் வரணி ஆதீன சபையினரின் பிரதிநிதிகளே தொடர்ந்து பரம்பரை தர்மகர்த்தாக்களாக பணியாற்றி வந்துள்ளனர். அரசு, வெளியார் எவர் தலையீடும் இல்லாமல், சர்வ சுதந்தரமாக ஏகபோக உரிமைகளுடன், இந்த ஏராளமான சொத்துக்களையுடைய ஆலயத்தை, பரம்பரை தர்மகர்த்தா ஒருவரே நிர்வகித்து வந்ததில் நாளடைவில் நிர்வாகத்தில் பல ஒழுங்கீனங்கள் தலைகாட்ட ஆரம்பித்தன. இந்த நிலைமையில் நிர்வாகத்தில் அரசு தலையிடவேண்டிய அவசியமேற்பட்டது. 1949ம் வருடத்தில், இந்த ஆலயம், 1926ம் வருடத்திய இந்துசமய அறநிலைய சட்டம் பிரிவு 65ன்கீழ் அறிக்கையிடப்பட்டு (Notify) பரம்பரை தர்மகர்த்தா அவர்களின் ஆதிக்கத்தையும், அதிகாரங்களையும் கட்டுப்படுத்தி, நிர்வாக அதிகாரி ஒருவரை ஐந்தாண்டு காலத்திற்கு நியமித்து நிர்வாகத்தை சீர்செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது.

இந்த ஐந்தாண்டின் இறுதியில் மீண்டும் முன்போலவே நிர்வாகத்தை தன்னிடம் ஒப்புவிக்க வேண்டும் என பரம்பரை தர்மகர்த்தா அவர்கள் கோர்ட்டில் வழக்காடி அதன்பேரில் 1953ம் வருடம் சென்னை உயர்நீதி மன்றத்தின் 1923ம் வருடத்திய தீர்ப்பை அனுசரித்து, நிர்வாக ஏற்பாடு ஒன்றை அமைத்து அதன்படி, பரம்பரை தர்மகர்த்தா அவர்கள் செயல்படவேண்டுமென தீர்ப்பாகியது. அதன்படி ஓ. ஏ. 81/56 எண்ணுள்ள 7-7-1957 தேதிய நிர்வாக ஏற்பாடு அமைக்கப்பட்டது. இதன்படி இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை அதிகாரி ஒருவர், பரம்பரை தர்மகர்த்தாவுக்கு உதவியாக பணியாற்றி வரவேண்டுமென்கிற நிலை உருவாகியது. மேற்படி ஏற்பாட்டில் நடைமுறையில் கண்ட சில குறைபாடுகளை நிவர்த்திசெய்து, திருத்தப்பட்ட நிர்வாக ஏற்பாடு ஒன்று 1963ல் அமுலுக்கு கொண்டுவர

பட்டது. (ஒ. ஏ. 60/60 தேதி 6—4—63) அதன்படி தான் தற்சமயம் நிர்வாகம் இந்துசமய அறநிலைய இலாகா நிர்வாக அதிகாரி ஒருவரின் உதவியுடன், பரம்பரை தர்மகர்த்தா அவர்களால் நடைபெற்று வருகிறது.

சொத்துக்களும், வருமானமும்.

இந்த ஆலயத்திற்கும், இதைச் சார்ந்த உப ஆலயங்கள் கட்டளைகளுக்கும் கீழ்க்காணும் விபரப் படிக்கு 49 கிராமங்களில் 13, 051 ஏக்கர் 7 செண்டு நஞ்சை, புஞ்சை நிலங்கள் உள்ளன. தமிழ் நாட்டிலேயே மிகவும் அதிகமான நிலப்பரப்புள்ள ஆலயம் இதுதான் என்றுகூட சொல்லலாம்.

வ. எண்.	கிராமத்தின் பெயர்.	தலைமையிடத்திலிருந்து மைல்.	ஏ.	செ.
1	நாலுவேதபதி	12	36	11
2	புஷ்பவனம்	8	30	76
3	தேத்தாகுடி வடக்குசேத்தி	6	117	46
4	செம்போடை	7	68	53
5	செட்டிபுலம்	13	31	84
6	கரியாபட்டினம்	13	237	92
7	கத்திரிப்புலம்	8	182	08
8	செண்பகராயநல்லூர்	10	108	77
9	தென்னம்புலம்	9	19	65
10	மருதூர் வடக்குசேத்தி	14	345	98
11	வடமழை, மணக்காடு	14	292	32
12	வேதாரணியபுரம்	14	7	91
13	மகாராஜபுரம் மேல்பாதி	15	15	04
14	மகாராஜபுரம் கீழ்பாதி	14	11	42
15	பெரிய குத்தகை	4	35	94

வ. எண்.	கிராமத்தின், பெயர்.	தலைமையிடத்திலிருந்து மைல்.	ஏ.	செ.
16	ஜாம்புவானோடை	37	3	24
17	தில்லைவிளாகம்	37	1	82
18	வாய்மேடு	15	35	80
19	குன்னலூர்	30	1559	43
20	எக்கல்	30	1	91
21	தகட்டூர்	15	34	90
22	மருதூர் தெற்குசேத்து	10	1	58
23	பன்னாள்	9	46	43
24	கடினல்வயல்	8	152	63
25	ஆதனூர்	4	298	39
26	கோவில்தாழ்வு	4½	167	75
27	அண்டர்காடு	4	371	19
28	கருப்பம்புலம்	6½	682	61
29	ஆயக்காரம்புலம் 3வதுசேத்தி	7	42	70
30	ஆயக்காரம்புலம் 1வதுசேத்தி	9	2	51
31	குரவப்புலம்	6	28	09
32	தேத்தாகுடி தெற்குசேத்தி	6	866	46
33	வடகட்ளை	2	1305	64
34	மறைஞாயநல்லூர்	2	665	45
35	பள்ளிநேர்மொழியாள்புரம்	3	1339	73
36	நெய்விளக்கு	3	22	59
37	தோப்புத்துறை	2	5	56
38	வேதாரணியபட்டினம்	–	191	10

வ. எண்.	கிராமத்தின் பெயர்.	தலைமை யிடத்திலிருந்து மைல்.	ஏ.	செ.
39	அகஸ்தியம்பள்ளி	2	141[illegible]6	74
40	கோடியக்காடு	8	9	65
41	கோடியக்கரை	10	1704	36
42	எட்டுகுடி	32	1	12
43	நடுவிக்காடு	48	12	79
44	திருவாரூர்	42	0	08
45	தாமரைப்புலம்	9	29	83
46	கொள்ளுக்காடு	50	156	11
47	சின்னமனை(கரிசைவயல்பிட்நெ.2)	53	42	00
48	அண்டகத்துறை	13	62	62
49	மகாராஜபுரம் கீழ்பாதி	14	246	53
	நிலப்பரப்பு ஆக மொத்தம்		13051	07

மேற்கண்ட சொத்துக்களிலிருந்து சுமார் 8645 கலம் நெல்லும் (மதிப்பு ரூ. 1,12,385/-) ரொக்கமாக சுமார் ரூ. 25000/-ம் தஸ்திக், மோகினி, உப்பளம் போன்ற அரசு நன்கொடைகள் மூலம் சுமார் ரூ. 38000/-ம் வருமானமும், கிடைக்கிறது. சொத்துக்களிலிருந்தும், இதர வகையிலும் ஆண்டு ஒன்றுக்கு சுமார் ரூ. 2,50,000/- வருமானம் கிடைத்து வருகிறது.

உப ஆலயங்களும், அறக்கட்டளைகளும்.

இந்த ஆலயத்துடன் கீழ்க்காணும் விபரப்படி 13 …லயங்களும், 2 அறக்கட்டளைகளும் இணைந்

உப ஆலயங்கள்.

…ன.	கிர…மத்தின் பெயர்.	ஆலயத்தின் பெயர்.	
1	கோடியக்கா…டு	ஸ்ரீ அமிர்தகடேஸ்வரர் ஆலயம்.	
2	அகஸ்தியம்ப…ள்ளி	ஸ்ரீ அக்னிபுரீஸ்வரர்	ஷை
3	வேதாரணியம்	ஸ்ரீ களஞ்சியம்பிள்ளையார்	ஷை
4	வேதாரணிய…ம	அபிஷேக கட்டளை மடத்திலுள்ள ஸ்ரீ உடையவர்	
5	புஷ்கரணி	ஸ்ரீ பாஸ்கரேஸ்வரர்	ஷை
6	வேதாரண…ரியம்	ஸ்ரீ தில்லைநாயக தம்பிரான்	
7	ஏரிக்கல…ர	ஸ்ரீ வித்யேசுவரர்	ஷை
8	தோப்ப…த்துறை	ஸ்ரீ வரதராஜப்பெருமாள்	ஷை
9	தோப்புத்துறை	ஸ்ரீ கைலாசநாதர்	ஷை
10	தோப்புத்துறை	ஸ்ரீ வனதுர்க்கை அம்மன்	ஷை
11	கரியாப்பட்டினம்	ஸ்ரீ கைலாசநாதர்	ஷை
12	சின்னுவடையார் கோயில் (பட்டுக்கோட்டை வட்டம்)	ஸ்ரீ ஆத்மநாத சுவாமி	ஷை
13	கரிசவயல் (பட்டுக்கோட்டை வட்டம்)	ஸ்ரீ சிதம்பரேஸ்வரர்	ஷை